முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | 12—7—57 | வெள்ளி | ஒலி 12

பத்தாண்டு காலமே பக்குவமான காலம்!

[7—7—57 அன்று திருவாரூரில், தி. மு. கழகத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கே தரப்படுகிறது.]

அருமைத் தோழர்களே!

திருவாரூர் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இவ்வளவு சிறப்பான முறையிலே ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, அதிலே நான் கலந்து கொள்ள வேண்டுமென்று அன்போடு அழைத்து, எனக்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவித்து, தங்களது அன்பினைத் தெரியப்படுத்திக் கொண்டமைக்கு எனது உளம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பற்றி நான் அதிகமான அளவுக்கு அக்கறை கொள்வதில்லை என்று தம்பி கருணாநிதி குறிப்பிட்டார். தஞ்சை மாவட்டத்தில் நான் எந்த அளவுக்கு அக்கறை செலுத்துகிறேன் என்பது, நான் இந்த மாவட்டத்திலேதான் பெண் கொண்டேன் என்பதிலிருந்து நீங்கள் புரிந்து கொள்ளலாம். ஆகவே தஞ்சை மாவட்டத்திலே எனக்குஅக்கறை குறைவென்ற அர்த்தமல்ல; தஞ்சை மாவட்டத்திலே நடைபெற்ற தேர்தலில் நாம் வெற்றி பெற்றிருக்க வேண்டிய ஒரு சில இடங்களில் கூட, நம்மால் வெற்றி பெற முடியாமல் போய் விட்டது பற்றி எனக்கு உண்மையிலேயே கொஞ்சம் கவலைஉண்டு. இந்த மாவட்டத்திலே நம் இயக்கம் பரவியிருக்கின்ற வேகமும்—எவ்வளவு நாட்களாக பரவியிருக்கின்றது என்ற வரலாறும் — அதனைப் பரப்புவதிலே திறமையுடைய நண்பர்கள் எத்தனை, பேர் இருக்கிறார்கள் என்ற கணக்கும்— இவைகளை எல்லாம் ஒன்று சேர்க்கின்ற நேரத்தில் மற்ற மாவட்டங்களைவிட மிக அதிகமான அளவுக்கு தஞ்சை மாவட்டத்தில் இந்தத் தேர்தலில் நமக்குப் பலன் கிடைத்திருக்க வேண்டுமென்று நான் எண்ணினேன். அந்த எண்ணம் கைகூடாதுபோன காரணத்தால் ஓரளவு நான் மனத்தாங்கல் அடைந்திருக்கிறேன் என்பது உண்மைதான். ஆனால் இங்கே உள்ள நண்பர்கள் ஆர்வத்திலே மட்டானவர்கள் என்பதோ—கூட்டங்களை நடத்துவதிலே தரம் குறைந்தவர்கள் என்பதோ எப்போதும் என் எண்ணமல்ல. அதிலும் இன்றைய தினம் திருவாரூரிலே இருக்கின்ற என் நண்பர்கள் ஏற்பாடு செய்திருக்கின்ற இந்தக் கூட்டத்தில் பெருவாரியான மக்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். நானாக எண்ணிக் கொண்டேன்; அதற்குக் காரணம் நான் தேர்தலுக்குப் பிறகும்—சட்ட சபையிலே அமர்ந்த பிறகும், இங்கு வராத காரணத்தால்— பத்திரிகைகளிலே 'அண்ணாதுரை' என்று பார்த்திருக்கிறவர்கள் 'யாரோ எம். எல். ஏ. வாமே; பார்க்கலாம்' என்றும், 'இவன் எங்கே அங்கே போனான்?' என்றும், 'இவன் போய்தான் என்ன செய்தானாம்?' என்றும், 'இவன் கூட அங்கு இருக்கிறானாமே?' என்றும் பற்பல எண்ணங்களோடு இங்கே பலர் கூடியிருக்கலாம். அவர்கள் அனைவரும் என்னை நன்றாகப் பார்க்கட்டும்!

★ ஆரூரில் அண்ணா ★

சமீபத்தில் நடைபெற்ற சென்னை சட்ட சபைக் கூட்டத்தில் பட்ஜெட் விவாதத்தின்போது நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் தன்னுடைய பதிலுரையில், எங்களைப் பார்த்து எடுத்துச் சொன்ன சில கருத்துகளுக்கு நான் இங்கே பதிலளிக்கவேண்டுமென்று கருணாநிதி கேட்டுக் கொண்டார். பதிலளிக்க வேண்டும் என்பதற்காக அவர் அதைச் சொல்லவில்லை; நான் அதிகமாகப் பேசாமல் போய் விடுவேனோ என்பதற்காக அவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். அவ்வளவே தவிர, நிதி அமைச்சர் சட்ட சபையிலே கேட்ட ஒரு வேண்டுகோள் சாதாரணமானதுதான்!

தம்முடைய வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி அவர் முதலிலே பேசிய பிறகு, அங்கே இருந்த உறுப்பினர்கள் நூறு பேருக்குமேல் அந்த விவாதத்திலே கலந்து கொண்டார்கள். காமராசர்கூட என்னிடம் சொன்னார். "சென்ற தடவை நடைபெற்ற பட்ஜெட் விவாதத்திலே இவ்வளவுபேர்கலந்து கொள்ளவில்லை; இந்தத்தடவை ஏராளமான பேர் கலந்து கொண்டார்கள்!" என்று! கலந்து கொண்ட நூறு பேரில் நாங்கள் பதினைந்து பேர்தான்— எங்களைப்போல் எதிர்க் கட்சிகள் வரிசையில் அமர்ந்திருந்தோர் அத்தனைபேரும் சேர்ந்தால் ஐம்பதுபேர் இருக்கும். மற்றவர்கள் அத்தனைபேரும்காங்கிரஸ் உறுப்பினர்கள். அவர்களே இந்தத் தடவை நடைபெற்ற விவாதத்தில் எதிர்க் கட்சியினர் எந்தெந்த மாதிரியான குற்றச் சாட்டுகளைச் சுட்டிக் காட்டுவார்களோ— எந்தெந்த மாதிரி தங்களுடைய தொகுதியிலே இன்னின்ன காரியங்கள் நடைபெற 'வேண்டுமென்று எடுத்துச் சொல்வார்களோ— அவைகளை எல்லாம் மிக விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அவர்கள் பேசியதற்கும் நாங்கள் பேசியதற்கும் ஒரு அடிப்படை வித்தியாசம் உண்டு. நாங்கள் மந்திரிகளை முன்னிருந்து' பார்த்துக் கொண்டு பேசினோம்; அவர்களிலே பெரும்பாலானோர் மந்திரிக்குப் பின்னாலேயிருந்து பேசினார்கள். நான் உருவத்தை மட்டும் குறிப்பிடவில்லை; உள்ளத்தையும் சேர்த்துக் குறிப்பிடுகிறேன். நாங்கள் மந்திரிகளுக்கு நேருக்கு நேராகச் சொன்னோம்; அவர்கள் மறைமுகமாகச் சொன்னார்கள். அவர்களும் குற்றம் குறைகளை எடுத்துச் சொல்லத்தான் செய்தார்கள். அதையும் நான் எடுத்துக் காட்டியபோது நிதி அமைச்சர் தனது பதிலிலே சொன்னார். "காங்கிரஸ்காரர்களே கட்சியைப்பற்றி இப்படி எல்லாம் பேசுகிறார்கள் என்று அண்ணாதுரை கேலி செய்தார். பாவம்,' அவருக்கு விஷயம் தெரியாது. எங்கள் கட்சியின் சிலாக்கியமே அது! நாங்கள் செய்யும் குற்றம் குறைகளை எடுத்துச் சொல்ல, நாங்களே அவர்களை அனுமதித்திருக்கிறோம்!" என்றார்.

நான் குறுக்கிட்டு பதில் சொல்ல எழுந்தேன். அதற்கு அவர் "இப்போது பதில் சொல்ல வேண்டாம்; இன்னும் பதினைந்து தினங்களுக்கு விவாதம் இருக்கிறது", என்றார்.

உடனே நான் மெதுவாக அவருக்கு மட்டும் கேட்கும்படிச் சொன்னேன், "உங்களுடைய கட்சியின் சிலாக்கிய

❋ 4-ம் பக்கம் பார்க்க.

★ ★ கற்பனை உரையாடல் ★ ★

மர நிழலிலே இருவர்!

[ஒரு ஆலமரத்தடியிலே இருவர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் அறிவியல் ஆசிரியர்; மற்றவர் வேதாந்தி.]

அறிவியல் ஆசிரியர் : ஐயா வேதாந்தியாரே! மரத்தடியில் படுத்திருந்த அறிஞர் கண்டு பிடித்த உண்மையென்னவென்று உமக்குத் தெரியுமோ?

வேதாந்தி : ஆலமரத்திலே படுத்திருந்த அறிஞர்தானே!

ஆசிரியர் : ஆலமரத்தடியில் படுத்திருந்த அறிஞரா? அவர் என்ன கண்டு பிடித்துள்ளார்?

வேதாந்தி : இது தெரியாதா உங்களுக்கு? ஒரு நாள் நடுப்பகல் நேரத்திலே அந்த அறிஞர் சாலையிலே சென்று கொண்டிருந்தார். வெய்யில் கடுமையாக இருந்தது. எனவே அவர் பக்கத்திலே இருந்த ஒரு ஆலமர நிழலிலே படுத்து ஓய்வு எடுத்துக்கொண்டார் அந்த ஆல மரத்தடியிலே பறங்கிக் கொடி படர்ந்திருந்தது; அதிலே பறங்கிப் பழங்களும் இருந்தன. அந்தப் பறங்கிப் பழத்தைப் பார்த்த அறிஞர், மேலே ஆலமரத்தை நோக்கினார். மேலே சிறிய ஆலின் பழங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அந்த அறிஞர் ஆலமரத்தைப் பார்த்து சிரித்தவாறு கூறினார்: "ஏ! ஆலமரமே! நீ இவ்வளவு பெரியதாக வளர்ந்து பயனென்ன? உனது காலடியில் படர்ந்திருக்கும் பறங்கிக் கொடியில் எவ்வளவு பெரிய பறங்கிப் பழம் இருக்கிறது பார்த்தாயா? உன்னிடம் அத்தகைய பழமேது?"—இவ்வாறு இகழ்ச்சியாகக் கூறிவிட்டு அப்படியே படுத்துத் தூங்கி விட்டார். சிறிது நேரங்கழித்து ஆலமரத்திலிருந்த பழம் ஒன்று அவர் கண்ணிலே விழுந்தது. உடனே அவர் திடுக்கிட்டு எழுந்தார். கண்ணிலே விழுந்த சிறிய ஆலின் பழத்தைப் பார்த்தார். அதே நேரத்தில் எதிரே கிடந்த பெரிய பறங்கிப்பழத்தையும் நோக்கினார். அப்பொழுதுதான் 'கடவுளின் படைப்பின் விந்தை' அவருக்குப் புலப்பட்டது. அவர் வியந்து கூறினார்: "அடாடா! என்னே கடவுளின் விந்தையான படைப்பு! சிறிது முன்பாக, நான் இந்த ஆலமரத்தைப் பழித்துக் கூறினேன். ஆனால் இப்பொழுதல்லவா உண்மை விளங்குகிறது! இந்த ஆலமரத்திலே பறங்கிப் பழம் பழுத்திருந்து, சற்று முன் விழுந்தது போல் விழுந்திருந்தால், இந்நேரம் என் கதி என்னவாகியிருக்கும்?...... ஐயோ! என் மண்டையே உடைந்திருக்குமே! களைப்படைந்த மக்களுக்கு நிழல் தந்துதவும், பெரிய மரமாதலால், இந்த மரத்திலே சிறிய பழத்தைக் கடவுள் படைத்திருக்கிறார்! இது தெரியாமல் மரத்தைப் பழித்தோமே!" இவ்வாறு அந்த ஆலமரத்தை வாழ்த்திவிட்டுச் சென்றார்.

ஆசிரியர் : நிழல் தரும் ஆலமரத்தில் சிறிய பழம் இருப்பதாகக் கூறினீர்கள்; ஆலமரத்தைப்போல் நிழல் தராத ஈச்ச மரத்திலும் சிறிய பழங்கள்தானே உள்ளன? அந்தப் படைப்பிலும் ஏதாவது விந்தை உண்டோ? என்னவோ உங்கள் ஆலமரத்தடி அறிஞர் கண்டுபிடிப்பு எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை!

வேதாந்தி : அது சரி சார்! உங்களுக்குப் பிடித்த மரத்தடி அறிஞர் கண்டுபிடித்ததைத்தான் கூறுங்களேன்!

ஆசிரியர் : உங்கள் ஆலமரத்தடி அறிஞரைப் போலவே மேனாட்டு அறிவியல் அறிஞர் நியூட்டன் ஒரு நாள் ஆப்பிள் மரத்தடியில் படுத்திருந்தார். அப்பொழுது அவர் தலையில் ஒரு ஆப்பிள் பழம் விழுந்தது ஆனால் அவர் நீங்கள் கூறிய அறிஞரைப் போல், "என்னே! கடவுளின் விந்தைப் படைப்பு" என வியந்து கூறிவிட்டுச் சென்று விடவில்லை! அப்பொழுது அவர், "இந்த ஆப்பிள் பழம் ஏன் கீழ்நோக்கி விழவேண்டும்? இது ஏன் ஆகாயத்தை நோக்கிச் செல்லக் கூடாது?" என்று கேட்டார். அதிலிருந்து, "பூமி தன்னை நோக்கி எல்லாப் பொருள்களையும் இழுத்துக் கொள்கிறது!" என்ற உண்மையைக் கண்டு பிடித்தார். அவர் கண்டுபிடிப்பு உலகத்துக்கு எவ்வளவு நன்மைகளை நல்கியுள்ளது தெரியுமா? இன்று பூமியின் புவி ஈர்ப்பு சக்தியின் வரம்பைத் தாண்டி செயற்கைச் சந்திரனை நிர்மாணிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இனி "நிலாக்களே! நிலாக்களே! ஓடி வாருங்கள்!" என்றுதான் பாடவேண்டும்!

வேதாந்தி : பார்த்தீர்களா? மர நிழலிலே இருவர் படுத்திருந்தனர். இருவரின் சிந்தனையும் ஒரேமாதிரி இருக்கிறதா? எனவே உலகில் கருத்து வேறுபாடு கொள்வது இயற்கை! என்ன இருந்தாலும் நாங்களெல்லாம் இல்லாவிட்டால் நீங்கள் உலகையே அழித்து விடுவீர்களய்யா! உங்களை நல்வழிப் படுத்துபவர்கள் நாங்கள்தானே!

ஆசிரியர் : நீங்கள் ஒன்றும் எங்களை நல்வழிப்படுத்த வேண்டியதில்லை! இந்த அரசியல் அமைச்சர்கள் எங்களை அடிமைப்படுத்தி அறிவு தரும் நச்சுக்குண்டுகளை தயாரிக்க உத்திரவு போடாமல் இருந்தாலே போதும்! உலகை அழிக்க நினைத்ததற்கா அன்று கலிலியோ 'குற்றவாளி' யெனவும் 'மதத்தின் துரோகி' யெனவும் குற்றம் சாட்டப்பட்டார்? நாட்டை அழிக்க நினைத்ததற்கா ஆர்க்கிமிடீஸ் கொல்லப்பட்டார்? அணுகுண்டைக் கண்டுபிடித்ததற்கா சாக்ரடீசுக்கு நஞ்சு கொடுக்கப்பட்டது? இல்லையே! அறிவியல் அறிஞர்கள் மக்களின் நல்வாழ்விற்காக உயிரையே தியாகம் செய்யப் பின் வாங்காதவர்கள்! ஜேம்ஸ் வாட், பாரடே போன்றவர்கள் உயிருக்கே ஆபத்து விளைவிக்கும் சோதனைகளைச் செய்யவும் பின் வாங்கியதில்லை. ஆனால் தன் கையிலே சட்டத்தையும் பொருளையும் வைத்துக் கொண்டு அறிவியல் அறிஞர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்கும் அமைச்சர்களே, ஆதிக்க வெறி கொண்டு அழிவுப் பாதையிலே சென்று கொண்டிருக்கிறார்கள்! குற்றம் அறிவியல் அறிஞர்கள்பால் கிடையாது! ஆனால் அரசியல் அமைச்சர்களிடமே உள்ளது!

வேதாந்தி : நீங்கள் சொல்வதும் ஒரு விதத்தில் உண்மைதான்! என்ன இருந்தாலும் அறிவியல் ஆசிரியருடன் அடியேன் வாதாட முடியுமா என்ன?... ஆனால் இந்த ஆலமர நிழலிலே நீங்கள் உகுத்த கருத்தோவியங்களைக் கேட்டு நல்ல ஆதிக்க வெறி பிடிக்காத அமைச்சர்களைப் பொதுமக்கள் தேர்ந்தெடுக்க வேண்டுமே!

ஆசிரியர் : எனவே எல்லாம் பொதுமக்கள் அளிக்கும் வாக்குச் சீட்டுகளிலேதான் இருக்கிறது!

—ஆனந்தன், பி. எஸ்ஸி, பி. டி.,

இன்றில்லா விட்டால் நாளை!

"இந்தியத் துணைக்கண்டத்தின் மற்ற சட்டசபைகளில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த மன்றத்திற்குக் கவனமூட்ட விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் பத்திரிகைகளில் பார்த்தோம்: தோற்றுப்போன ஒருவர் கவர்னராகப் பதவி பெற்று சட்டசபையில் வந்து ஆற்றிய உரையை எதிர்த்துப் பெரிய அமளி நடைபெற்றிருக்கின்றது!

"நம்முடைய மாநிலத்தில் பெருமையாகவும் திறமையாகவும் நிர்வாகம் நடத்தி வந்த கவர்னர் பிரகாசா அவர்கள், பம்பாய் சட்டமன்றத்தில் தன் உரையை நிகழ்த்தச் சென்ற நேரத்தில், இரு மொழி மாநிலம் வேண்டாம் என்ற ஒரு காரணத்தைக் காட்டி, சட்டசபையில் பெரிய அமளி ஒன்று நடைபெற்றிருக்கிறது.

"எல்லாவற்றையும்விட மேலாக, இராஜஸ்தான் சட்டசபையில் திரிலோக் சிங் என்பவரை, சபாநாயகராகத் தேர்ந்தெடுத்தார்கள்; இதை எதிர்த்து ஒருவர் சபாநாயகர் வெளியே போயிருந்த சமயம் பார்த்து சபாநாயகருடைய இருப்பிடத்திலே உட்கார்ந்து கொண்டு பிடிவாதமாக, 'அகலமாட்டேன்' என்றார்.

"இத்தனை சம்பவங்களெல்லாம் மற்ற மற்ற சட்டசபைகளில் நடைபெறும் இந்நேரத்தில், இங்கு, கட்டுப்பாடுடனும் கண்ணியத்தோடும், பாசத்தோடும் அடக்கத்தோடும், கனிவுடனும் நடந்து கொள்ளும் எங்களுடைய தன்மையை நீங்கள் உணர மறுக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; எங்களைப் பற்றிக் கண்டித்துக் குறையும் கூறி வருகிறீர்களென்றால் நீங்கள் எங்களை நான் முன் குறிப்பிட்ட அந்தப் பாதைக்குத் துரத்துகிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

"நாங்கள் எப்போதும் ஜனநாயகத்தின் அடிப்படையில் நின்றுதான் பணியாற்றி வந்துள்ளோம்.

"நீங்கள் ஆணவமாக வேண்டுமானால் கருதிக்கொள்ளலாம், **இன்றில்லா விட்டாலும் என்றைக்காவது ஒரு நாள் ஆட்சிப் பொறுப்பை மக்கள் எங்களிடம் ஒப்படைப்பார்கள் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் பொறுப்பை உணர்ந்து நடந்து கொள்கிறோம்.** ஆகவே நாங்கள், பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—சட்ட சபையில் அறிஞர் அண்ணா

வெள்ளி 12—7—57 சென்னை

வளர்ச்சி' வேண்டும்!



வடக்கு வாழ்கிறது;

தெற்கு தேய்கிறது!

—மக்கள் மன்றத்திலே இதுவரை முழங்கப்பட்டுவந்த இந்த வாசகங்கள் இப்போது சட்டமன்றத்திலே—தமிழகத்தின் பிரதிநிதிகள் அமர்ந்திருக்கும் ஆலோசனைக் கூடத்திலே எடுத்துரைக்கப்படும் நிலையை அடைந்திருக்கின்றன.

இது அந்த வாசகங்களின் உண்மையையும் வலிமையையும் மட்டுமல்ல; இந்த இழிநிலையை மாற்றியமைக்கப் பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியையும் எடுத்துணர்த்துவதாய் இருக்கிறது.

அர்த்தமற்ற பேச்சு!

புள்ளி விபரமற்ற சோத்தை வாதம்!

அடுக்குச் சொல் அலங்காரம்!

—என்று துடுக்காகப் பேசி; எப்போதும் எடுப்பார் கைப்பிள்ளையாகத் தென்னகம் இருக்கவேண்டுமென்று விபீஷண வேடம் புனைந்திருப்போர் அனைவரது உண்மை சொரூபம் விளங்கிடும் வகையிலே குன்றின்மீது ஏற்றிவைத்தத் திருவிளக்கென நல்லவர் உள்ளமெலாம் ஒளி விடுகிறது, அந்த உண்மை விளக்கம்!

—இதைப் புரிந்துகொண்டும், புரியாதவர்கள்போல நடிக்கின்றவர்களும் சிலர் உண்டு! அதைச் சேர்ந்ததுதான் சென்னையிலிருந்து வரும் 'சுதேசமித்திரன்' ஏடு!

"தொழில் துறையில் தமிழ்நாடு பின்னணியில் தேங்கியிருக்கிறது; வடக்கே பல பகுதிகளில் பெரிய கன அல்லது இயந்திரத் தொழில்கள் வளம்பெற்று வருகின்றன என்பது உண்மையே!"

—என்று *"பிரிவினை கோஷம்"* என்கிற தலைப்பிலே ஜூலை 6-ம் தேதிய இதழில் தலையங்கம் தீட்டியிருக்கிறது.

—அப்படி அது உண்மையானால் அதற்கு யார் பொறுப்பாளி? 'பெரிய கன அல்லது இயந்திரத் தொழில்கள்' இந்திய உபகண்டத்தின் இந்தப் பகுதியில் ஏற்படாமைக்குக் காரணம் என்ன?

—இதற்குண்டான காரணங்களையும் ஆராயப் புகுந்திருக்கிறது அந்தத் தலையங்கம்:

"பெரிய இயந்திர அல்லது கனரகத் தொழில்களை எந்த இடத்திலும், நினைத்த நேரத்தில் வளர்த்துவிடுவதென்பது சாத்தியமில்லை. அவைகளுக்குப் போதிய மூலதனம், மூலப் பொருள்கள், தொழில் விற்பன்னர்கள் அத்தியாவசியம். தமிழ் நாட்டில் தனவந்தர்களின் எண்ணிக்கை மற்ற இடங்களுடன் ஒப்பிடுகையில் குறைவு. அவர்களிலும் மேற்குறித்த தொழில் இனங்களில் மூலதனம் போடும் உள்ளப் பாங்குள்ளவர்கள் இன்னும் சொற்பம்"

—இரும்பு, நிலக்கரி போன்ற மூலப் பொருள்களைப்போல ஒரு நாட்டின் தொழில் வசதிக்கு மிகவும் முக்கியமானது மூலதனம்!

மூலதனம் இருக்கிறது தமிழகத்தில்; இருந்தாலும் அந்த மூலதனம் இதுபோன்ற தொழில் துறை வளர்ச்சிகளில் முடங்குவதற்கு வெட்கப்படுகிறது; பயப்படுகிறது! மூலதனமுடையோர் அதை இந்தத் துறைகளில் செலவிட நடுங்குகிறார்கள்!

இன்னும் சற்று விளக்கமாகக் கூறவேண்டுமானால் 'நாடு' என்கிற குழந்தைக்கு 'தொழில் துறை' என்கிற வளர்ச்சியைத் தருவது மூலதனம் என்கிற தாயாகும்.

அந்தத் தாய்ப் பால் கிடைத்தால் நாட்டுக் குழந்தை இதர மேல் நாட்டுக் குழந்தைகளைப்போல ஊட்டத்தோடும் உரத்தோடும் வாழ முடியும்! இங்கிலாந்தைப்போல; ஜெர்மனியைப்போல; ஜப்பானைப் போல அது தொழிற்சாலை வசதிகள் நிரம்பப் பெற்றதாய் நிமிர்ந்து நிற்க முடியும்!

அப்போதுதான் அமெரிக்காவைப்போல அந்த நாடு மிக உயர்ந்த வாழ்க்கை வசதிகளைப் பெற்று வாழமுடியும்!

அப்போதுதான் சோவியத் நாட்டைப்போல் வேலையில்லாத் திண்டாட்டம் அறவே இல்லாத சுபிட்ச பூமியாகத் திகழமுடியும்!

ஆனால் போதுமான 'மூலதனம்' என்கிற தாய்ப்பால் இல்லாவிடில் இவை எதுவுமே முடியாது!

தாய்ப் பால் இல்லாத குழந்தை செத்தா விடுகிறது?

இல்லை; புட்டிப் பாலை உபயோகித்துத் தாய்ப்பால் இல்லாத குறையை நீக்க முயற்சிக்கிறோம்!

அப்படியானால் 'தனிப்பட்டோர்' மூலதனம் என்கிற தாய்ப்பால் இல்லாவிட்டால் ஒரு நாடு தொழில் வளர்ச்சி பெறுவது எங்ஙனம்?

அரசாங்கமே முன்வந்து தொழில் துறைகளில் முதலீடு செய்வதன் மூலம்தான் தனிப்பட்டவர்கள் முதலீடு செய்யாத குறையைத் தவிர்க்க முடியும். ஆமாம்; அரசாங்கம் இப்படி முதலீடு செய்வதைத்தான் ஒரு நாட்டிற்குத் தொழில் வளர்ச்சி தரும் புட்டிப்பால் என்று கூற வேண்டும்!

—இதையே இப்போது தமிழ் நாட்டிற்கு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

"தொழில்துறையில் தமிழ்நாடு பின்னணியில் தங்கியிருக்கிறது"

—'மித்திரன்' ஒப்புக்கொள்கிறது!

"தமிழ்நாட்டில் தனவந்தர்களின் எண்ணிக்கை மற்ற இடங்களுடன் ஒப்பிடுகையில் குறைவு; அவர்களிலும் மேற்குறித்த தொழில் இனங்களில் மூலதனம்போடும் உள்ளப் பாங்குள்ளவர்கள் இன்னும் சொற்பம்"

—'மித்திரன்'தான் இதையும் சுட்டிக் காட்டுகிறது.

குழந்தைக்குப்போதிய வளர்ச்சியில்லை; அடுத்த வீட்டுக் குழந்தையைப்போல டஷ்டியாக இல்லை. 'கிரைப் வாட்டர்' குழந்தையைப் போல சூம்பிப்போயிருக்கிறது.

—இந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து குழந்தைக்கு வளர்ச்சி தருவதற்கோ தனிப்பட்டோர் மூலதனம் என்னும் தாய்ப் பாலும் கிடையாது!

—நிலைமை இவ்விதம் மோசமானால் ஒரு பொறுப்புள்ள சுரண்டும் நோக்கம் கொண்டிராத மத்திய அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்?

புட்டிப்பால் தருவதைப்போல அரசாங்கம் தானே முன் வந்து முதலீடு செய்கின்ற தொழிற்சாலைகளையெல்லாம் வளர்ச்சி குன்றிப் போயிருக்கும் தமிழகத்திலே துவங்க வேண்டும்!

செய்தார்களா இவர்கள்?

இல்லை!

இனியாவது செய்ய முயற்சிப்பார்களா?

—'மித்திரனு'க்குத்தான் வெளிச்சம்!

வீரம் பேசினால் போதாது; விவேகம் உணர்த்திட வேண்டும்!

✻ 1-ம் பக்கத் தொடர்ச்சி

மானது அது என்று சொன்னீர்கள். உண்மையிலேயே உங்கள் கட்சிக்காரர்கள் உங்கள் ஆட்சியைக் குறை கூறுகிறார்கள் என்றால், உங்கள் ஆட்சி அவ்வளவு அவலட்சணம்! நாங்களும் சொல்லுகிறோம்; அவர்களும் சொல்லுகிறார்கள்!" என்று.

"ஏதோ ஒன்று; பிறகு சொல்லிக் கொள்ளலாம், இப்போது ஒன்றும் சொல்ல வேண்டாம்!" என்றார் நிதி அமைச்சர்.

அவருடைய உரையைப்பற்றி உங்களிடம் சொல்வதற்கு முன்னால், அவர்களும் நாங்களும் எப்படி சட்டசபையிலே பழகிக் கொள்கிறோம் என்பது பற்றி ஒன்று சொல்கிறேன்.

நாங்கள் சட்டமன்றத்திற்கு வராததற்கு முன்னால், நாங்கள் வரக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு பாடுபட்டவர்கள் அவர்கள். அப்படி வரக்கூடாது என்று நினைத்ததற்குக் காரணங்கள் இரண்டு! ஒன்று, எங்களிலே பலபேர் அப்பேற்பட்ட சட்டசபையில் உட்கார தகுதியுடையவர்கள் அல்ல என்பது மற்றது. 'இவர்கள் வெளியிலேயே இருந்து கொண்டு வம்பு செய்கிறவர்கள்; உள்ளே வந்தால் இன்னும் அதிகமாக வம்பு செய்வார்கள்; வெறும் வாயை மெல்லுகின்ற ஔவையாருக்கு ஒரு பிடி அவலும் கிடைத்து விட்டால் சொல்லவேண்டுமா?' என்ற காரணமாகும். ஆனால் இப்போது, தேர்தல் காலத்திலே எங்களைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்த இரண்டு கருத்துக்களும் தவறு என்பதை காங்கிரஸ் அமைச்சரவை ஓரளவு உணர்ந்திருக்கிறது. 'இவர்களும் சட்டசபைக்கு வர வேண்டியவர்கள்தான்' என்று முதலில் எண்ணினார்கள்; 'இவர்கள் வந்ததால்தான் சட்டசபை விவாதம் நல்லபடி இருக்கின்றது' என்று பிறகு எண்ணினார்கள்; 'இவர்கள் வராமலிருந்தால் சட்ட சபை எவ்வளவு உப்பு சப்பின்றி இருந்திருக்கும்' என்றும் கருதினார்கள்; 'இவர்கள்தானே வந்திருக்க வேண்டியவர்கள்' என்று இப்போது எண்ணுகிறார்கள். 'இனி இவர்கள் நம்மை வர விடுவார்களா?' என்று இரண்டு ஆண்டுகளுக்குப் பின் எண்ணிக் கொள்வார்கள். அந்த அளவிலே அவர்கள் மனப்பான்மை மாறிக் கொண்டே வருகின்றது. அதற்குக் காரணம், நான் சொன்னால் வருந்த மாட்டார்கள் என்று கருதுகின்றேன்; எங்களுடைய அடக்க ஒடுக்கம்தான் ஆகும்!

எனக்கு சட்டசபையிலே இருக்கின்ற கடினமான வேலை நம்முடைய தம்பிமார்கள், காங்கிரஸ் மந்திரிகள் ஏதாவது தப்புக் கணக்கு கொடுத்தால்—கோப வார்த்தைகளை வீசினால்—அலட்சியப் பார்வை பார்த்தால்—பதிலுக்கு எங்கே அதே முறைகளைக் கையாளுகிறார்களோ என்று பார்த்து—கண்காணித்து 'வேண்டாம்; வேண்டாம்!' என்று தடுப்பதுதான் மிகமிகக் கடினமான வேலை! 'அதென்ன அண்ணாதுரை சட்டசபைக்குச் சென்றதும் அவ்வளவு சாதுவாகி விட்டானா?— என்று கருதாதீர்கள். அதற்கல்ல, சட்ட சபையிலே இருக்கின்ற நாங்கள், ஆண்டுக்கு பத்து காங்கிரஸ் எம். எல் ஏ.க்களின் மனதையாவது மாற்ற வேண்டும் என்ற நோக்கோடு உள்ளே போயிருக்கிறோமே தவிர, எங்கள் வீரத்தை மட்டும் காட்டவேண்டும் என்பதற்கல்ல. வீரத்தை நித்த நித்தம் காட்டுகிறோம், இத்தகைய மேடையிலே—நாலடி உயரத்திலே—ஆறடி உயரத்திலே—பத்தாயிரம் பேருக்கு மத்தியிலே—ஐம்பதாயிரம் பேருக்கு மத்தியிலே—இப்படியாக! இப்போது ஏற்பட்டிருக்கிற புதிய வேலை சட்ட சபையிலே வீற்றிருந்து பேசுகின்ற நேரத்தில் 'இவர்கள் நாட்டு மக்கள் உள்ளத்தில் உருக்கமான வார்த்தைகளைப் புகுத்த மட்டும்தான் கற்றவர்கள்' என்று கருதிக் கொண்டிருக்கிற மதிப்பிற்குரிய காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள், நாங்கள் கையாளுகிற முறைகளையும், பண்பையும், அடக்க ஒடுக்கத்தையும், எங்களுடைய கனிவான வார்த்தைகளையும் கேட்டு 'ஐயோ. இது நாள்வரை தெரியாமல் போய் விட்டதே!" என்று வருந்தி, "நாங்களும் இந்தக் கட்சிதான்; கொள்கைதான்!" என்று எடுத்துச்செல்ல வேண்டும் என்பதற்காக துணிவுடன் இன்றைய தினம் பணியாற்றி வருகிறோம்.

இது எந்த முறையில் அமைந்த தென்றால் — பழங்காலத்தில் ராஜாக்கள் காலத்தில் இரண்டு சங்கீத வித்வான்களுக்குள்ளே போட்டி வந்தது. ஒருவன் சொன்னான், "இந்தக் கோவிலில் இருக்கின்ற இந்த சிலையின் கண்களில், நான் பாடினால் கண்ணீர் அப்படியே கசியும், கல்லும் கசிந்துருகும் என் கீதம் கேட்டு!" என்றான். மறுத்தான் மற்றவன். ஊரெல்லாம் திரண்டது. சவால் விட்ட முதல் வித்வான் பாடினான்; அவன் சொன்னபடியே கல்லிலே இருந்து கண்ணீர் வடிந்தது. அதைப் பார்த்தவுடன் சபையிலே இருந்த மற்றொரு இளம் வித்வான் எழுந்து, "இதிலே ஒன்றும் ஆச்சரியம் இல்லை; நீங்கள் கல்லிலே இருந்து கண்ணீர் வரச் செய்தீர்கள்; நான் பாடினால் உங்களுடைய கண்களிலேயிருந்து கண்ணீர் வடியும்!" என்றான். அதோடுமட்டுமல்ல; "கல்லிலே இருந்து கண்ணீர் வந்தது வித்தை! சங்கீதமல்ல; வாருங்கள் காட்டுகிறேன்" என்று சபையோரை அழைத்துக் கொண்டு கோவிலின் பின்புறம் போனான். அங்கே பிரகாரத்தில் வித்வான் பாடுகிற நேரத்தில் உள்ளேயிருக்கிற ஒரு விசை திருப்பப்படும். அப்போது அங்கு துளைக்கப்பட்டிருக்கிற ஒரு அருவியின் வழியாகத் தண்ணீர் சிலைக்குள்ளே புகுந்து, கண்களிலேயிருந்து, சினிமா காட்சிகளிலே காண்பது போல் சொட்டு சொட்டாகக் கசியும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. அதைக் காட்டிய இரண்டாவது வித்வான் "இதனால்தான் கண்ணீர் வந்தது பாட்டினால் அல்ல! இங்கு வாருங்கள்; இந்தக் கல்லும் கசிந்துஉருகும்படியாகப்பாடிய அந்த வித்வானை உட்கார வையுங்கள். நான் பாடுகிறேன்" என்று சொல்லி, அவன் பாட ஆரம்பித்து அவனுடைய பாட்டினுடைய உருக்கத்தாலும், ராகத்திலே கலந்திருந்த பொருளாலும், அந்த வித்வான் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான். அவையோரும் சொன்னார்களாம். "கல்கூட கசிந்து உருகலாமய்யா! இந்தக் கல்நெஞ்சம் படைத்தவனை இப்படி அழுகிறானே! ஆகவே இரண்டாவது வித்வானின் சங்கீதம்தான் சிறந்தது" என்று பாராட்டினார்கள். இப்படி நான் ஒரு கதை படித்திருக்கிறேன்.

அதைப்போல் காங்கிரஸ்காரர்கள் வெள்ளைக்காரனுடைய மனதை மாற்றினார்கள் தங்களது பேச்சால். அண்ணாதுரைக் கூட்டம் காங்கிரஸ்காரர்களது மனதை மாற்ற விரும்புகிறது, சட்ட சபையில்!

அதனாலேதான் அடக்க ஒடுக்கத்தை அங்கு கையாளுகிறோம்; ஏட்டிக்குப் போட்டியாக போகாமல் இருக்கிறோம்; சில வேளைகளிலே பரிகாச சிரிப்புகள் கூட காதுகளிலே விழுகிறது; ஒரு காதிலே வீழ்ந்தால் மறு காது வழியாக விட்டு விட்டு, "பொறு மனமே, பொறு! காலம் கனியட்டும்; கண்ணீர் கசியட்டும்; கல்லும் உருகட்டும்; காங்கிரஸ்காரர் நம்முடைய பக்கத்திலே வரட்டும்; அந்த அளவுக்கு நம்முடைய கொள்கை வளரட்டும்!" என்று நாங்கள் இருந்து வருகிறோம். இதுதான் இன்றைய தினம் எங்களுக்கும் அவர்களுக்கும் இருக்கின்ற தொடர்பு!

இதை நான் ஏன் சொல்லிக் கொள்ளுகிறேன் என்றால், இந்த மனப்பான்மையிலே தொண்டு செய்கிற எங்களைப் பார்த்துத்தான் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் தம்முடைய பதிலில் ஒருவார்த்தை சொன்னார்—நான் கருதுகின்றேன்; இதுவரையிலே நிதி அமைச்சர் வேறு யாருக்கும் அப்படி சொல்லியிருக்கமாட்டார்—இந்தியத்துணைக்கண்டத்திலே வேறு எந்த சட்டசபையிலும் ஆளுங்கட்சியார் எதிர்க்கட்சிக் காரர்களைப் பார்த்து இதைப் போல் கூறியிருக்க மாட்டார்கள்—ஆனால் நமது

✻ 7-ம் பக்கம் பார்க்க

குளித்தலை வட்ட விவசாயிகள் கோரிக்கை தினம்.

★

மாபெரும் ஊர்வலம்—பொதுக் கூட்டம்.

●

நியாயவாரச் சட்டத்தின் பயனை விவசாயிகள் அனுபவிக்கவும் அதற்கான முயற்சிகளை அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தவும், 14—7—57 ஞாயிற்றுக்கிழமை. மாலை 6-மணிக்கு, குளித்தலை வ. உ. சி. சதுக்கத்தில், மாபெரும் விவசாயிகள் பொதுக்கூட்டம் நடைபெறும். அது சமயம்—

மு. கருணாநிதி
அம்பில்—தர்மலிங்கம்
பொன்மலை—பாராங்குசம்
குளித்தலை—தி வீ. முத்துகிருஷ்ணன்
கவண்டம்பட்டி— க. முத்து
ஆகியோர் பேசுவார்கள்.

குறிப்பு: அன்று மாலை, நங்கவரத்திலிருந்து தோழர்கள் குளித்தலை தி. வீ. முத்துகிருஷ்ணன், கவண்டம்பட்டி—க. முத்து. கு. சண்முகம் ஆகியோர் தலைமையில் ஒரு மாபெரும் விவசாயிகள் ஊர்வலம் புறப்பட்டு, பொய்யாமணி, பேட்டைவாய்த்தலை வழியாக, குளித்தலை வந்தடையும்.

இங்ஙனம்,
விவசாயிகள் முன்னேற்ற சங்கம்,
(குளித்தலை வட்டம்.)

பி. சி. கணேசன், பி. எஸ்ஸி., பி. டி.

காலை ஒன்பது மணி அடித்தவுடன் என் உள்ளத்தில் ஒரு படபடப்புத் தோன்றும்; வேகமாக ஓடிப்போய் மாடியில் நின்று கொண்டு தெருக் கோடியில் பார்வையைச் செலுத்துவேன்!

ஏமாற்றம்......இன்று ஒரு வேளை...கைக் கடிகாரத்தைப் பார்ப்பேன்......பெரிய முள் மெதுவாகப் பன்னிரண்டைத் தாண்டிக் கொண்டிருக்கும் ...என்னவோ தெரியவில்லையே ...ஏன் இவ்வளவு காலதாமதம்? அதோ, தூரத்தில் ஏதோ ஒரு உருவம்; ஆம், அந்தப் பெண்தான்......நடமாடும் மோகினி....நயனமொழியில் ஆண்களின் நாவையே கட்டிப் போட்டுவிடும் அந்த சாகசக்காரி...சேச்சே! அவளை சாகசக்காரி என்று சொல்லுவது அவளுக்கு இழைக்கும் பெரிய அநீதி...யாரிடம் எப்பொழுது அவள் சாகசம் செய்தாள்? அழகும் அதைப் பரிமளிக்கச் செய்யும் கவர்ச்சியும் அவளிடம் இருப்பதாலேயே அவள் சாகசக்காரி ஆகிவிடுவாளா, என்ன?

...அந்த உருவம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது...... அவள் மாதிரி இல்லையே... அடடே...எவ்வளவு முட்டாள் நான்...யாரோ இன்னொருத்தி ......வாத்தை அன்னமென்று கருதி...மணி ஒன்பதேகால் ஆகி விட்டதே! இன்னும் ஏன் அவள் வரவில்லை? அவள் வராவிட்டால் என்னுடைய உள்ளம் ஏன் இவ்வளவு வேதனைப்பட வேண்டும்? அவளுக்கும் எனக்கும் என்ன உறவு? இன்னும் அவள் யார்; எங்கிருக்கிருள் என்றுகூட எனக்குத் தெரியாது! என்னைப்பற்றியும் அவள் அறிந்திருப்பாளோ என்னவோ! என்னைப் பற்றி அவள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியம்...என் வீட்டைத் தினந்தோறும் தாண்டிச் செல்லும் அவளுக்கு நான் திருமணம் ஆனவன் என்பது தெரியாமலா இருக்கும்? காய்கறி விற்பவளோடு கைவேலையையும் மறந்து பேரம் பேசி நிற்கும் மனைவி பானுவும், தெருவையே நிர்தூளிபடுத்தும் என் மகள் ஐந்து வயதுச் சிறுமி கலாவும், அவளுடைய சேஷ்டைகளுக்குப் பல சமயங்களில் துணையாகவும் சில சமயங்களில் இடையூருகவும் இருக்கும் மூன்று வயது சொக்குவும், அவர்கள் இருவருடைய 'திருவிளையாடல்'களையும் வாசல் கம்பியைப் பிடித்துக் கொண்டு பொருள் புரியாவிட்டாலும் பொக்கைவாய்தனைக் காட்டி ரசித்து மகிழும் ஒரு வயது மாதவியும், அவள் கண்ணில் படாமல் எப்படி இருந்திருப்பார்கள்? நிச்சயமாக நான் திருமணமானவன் என்பது அவளுக்குத் தெரிந்துதான் இருக்க வேண்டும்...

...ஒவ்வொரு நாளும் என் வீட்டைத் தாண்டிச் செல்லும் பொழுது, வாசலில் தொங்கும் பெயர்ப் பலகையின்மீது ஆவலோடு விழியை ஓட்டுவாள்...பதை உதட்டசைவு தெளிவாக எடுத்துக் காட்டும்...படித்த பின் அவளுடைய முகத்தில் ஏற்படும் மலர்ச்சியும் திருப்தியும்...இதெல்லாம் நானாகக் கற்பனை செய்து கொண்டதாக இருக்குமோ என்றுகூட எண்ணியது உண்டு! ஆனால், தினமும் படித்த அந்தப்பெயரையே ரசிக்க ஆசைதான்! ஆனால், பயம் எங்கிருந்தோ பிடரியைப் பிடித்துத் தள்ள அங்கிருந்து வேகமாக நடந்தேன்...

...அடடே, கைக் கடிகாரம் பத்து மணிபல்லவா காட்டுகிறது! இனி அவள் எங்கே வரப்போகிருள்? இருந்தாலும் ஒரு சபலம்—மற்றொரு முறை அவள் திருப்பித் திருப்பிப் படிப்பானேன்? மகிழ்வானேன்?

அதுதான் போகட்டும்...ஒரு நாள்...ரயில்வே ஸ்டேஷனில் அவளைத் தற்செயலாகச் சந்தித்தேன்...கூட இருந்தது அவள் தந்தை என்று நினைக்கிறேன்... என்னைப் பார்த்தவுடன் மெதுவாகத் தலை கவிழ்ந்தாள்! புன்னகை அந்த நிலா முகத்திற்கு அழகு சேர்த்தது...மீண்டும் அவள் தலைநிமிர்ந்து என்னைப் பார்த்த பொழுது... அந்தக் கூரிய விழிகளிலிருந்து எவ்வளவோ உணர்ச்சிகள் வெள்ளமாக வெளிப்பட்டன! அந்த உணர்ச்சிகளைத் தடுக்க முயல்வதுபோல் அவளது இமைகள் படபடவென்று அடித்துக் கொண்டன.

"எந்த ஊருக்குப் போகிருய்?" என்று கேட்க எனக்கு ஆசை. அழகின் முன் தைரியம் கூட செத்துவிடும் போலிருக்கிறது. நான் ஊமையானேன். அவளுடைய அழகை நின்று ரசிக்க ஆசைதான்! ஆனால், பயம் எங்கிருந்தோ பிடரியைப் பிடித்துத் தள்ள அங்கிருந்து வேகமாக நடந்தேன்...

விழியைத் தெருக்கோடிக்கு வீசினேன். அவளைக் காணேம்; காணவே காணேம்!

* * *

மறுநாள்...இரண்டாம் நாள் ......மூன்ரும் நாள்......அவள் வரவேயில்லை. தெருவே அவள் பாததூளி படாமல் சோபையிழந்து விட்டது.

அவள் பெயர்கூட நான் அறிந்து கொள்ளவில்லை. என்ன பெயராய் இருந்தால் என்ன? எந்தப் பெயரும் அவளோடு சம்பந்தப்பட்டால் சிறப்புப்பெற்றுவிடும். அவளைக் காணமல் எனக்கென்னவோ போல் இருந்தது. எதிலுமே என் மனம் ஓடவில்லை. நான் கதைகளில் படிக்கும் கதாநாயகியெல்லாம் அவளாகவே காட்சியளித்தார்கள். கதை எழுத ஆரம்பித்தால்கூட அவளைத் தவிர, வேறு கதாநாயகி என் கற்பனையில் அகப்படவேயில்லை!

ஒரு நாள்—

ஒரு பையன் என்னைத்தேடிக் கொண்டு வந்தான். அவனை எங்கோ பார்த்ததாக ஞாபகம். சரியாக நினைவில்லை.

"சார், அக்கா இந்தக் கடித்தத்தை உங்களிடம் கொடுக்கச் சொல்லியது" என்று என்முன் ஒரு 'கவரை' நீட்டினன்.

"உன் அக்காவா; அது யார்?" என்றேன் கடிதத்தை வாங்கிக் கொண்டு, சற்று திகைப்புடன்!

"நிர்மலா!" என்ருன் பையன் பளிச்சென்று.

ஒருவேளை 'அவளாக இருக்குமோ! எப்படி உறுதிப்படுத்துவது என்று தெரியாமல் விழித்தேன்.

"அதுதான் சார், டைப்பிஸ்ட் நிர்மலா தினமும் கலெக்டர் ஆபீசுக்கு இந்தத் தெரு வழியாகத்தானே போகும்," என்ருன் பையன் என்னுடைய உள்ளத்தை அறிந்தவன் போல.

"ஆமாம் தெரியும். அதுதான் உன் அக்காவா?" என்று கூறிவிட்டு மெதுவாக ஆவலோடு கடிதத்தின் உறையைக் கிழித்தேன்.

"நான் வருகிறேன்," என்று சொல்லிக் கொண்டே பையன் சைக்கிளில் ஏறி மறைந்தான்.

கடிதத்தைப் படித்தேன்:

"அன்புள்ள எழுத்தாளர் அவர்களுக்கு,

வணக்கம். என்னுடைய திருமணம் வெள்ளிக்கிழமை நடக்கவிருக்கிறது. நீங்கள் அவசியம் வந்திருந்து கௌரவிக்க வேண்டும். திருமண அழைப்பிதழ் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். நன்றி!

தங்கள், ரசிகை,

நிர்மலா"

கனவு சிதைந்தது! கட்டிய கோட்டைகள் சரிந்தன!

* * *

அதற்குப் பிறகு நிர்மலாவை மறந்து விட்டேன். 'மறக்காமல் என்ன செய்வது? அவளுடைய திருமணத்திற்கும் நான் செல்லவில்லை. அவள் அதைப் பற்றி என்ன நினைத்தாளோ! என்ன நினைத்தால் எனக்கென்ன?

ஆறு மாதங்களுக்குப் பிறகு ஒரு நாள்! மாயவரம் ரயில்வே ஸ்டேஷனில் மேல் வகுப்பு 'வெய்டிங் ரூமில்' நிர்மலாவைச் சந்தித்தேன். அவளுடைய கணவரும் உடன் இருந்தார். சந்திப்பு எதிர்பாராதது! இது வரை என்னிடம் ஒருமுறை கூடப் பேசியறியாத நிர்மலா, என்னுடைய குடும்ப நலன்களைப் பலநாள் பழகியவள் போல் விசாரித்தாள். நான் ஒரு பெரிய எழுத்தாளர் என்று அவளுடைய கணவருக்கு அறிமுகப்படுத்தினுள். அவரும் என்னைக் காண்பதில் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்தார்.

"நாங்கள் இப்பொழுது சிதம்பரத்தில்தான் இருக்கிரேம்; ஒருமுறை அவசியம்

உண்ணும் நேரத்தில் உவகை பெறுவர்!

"உணவுத் தானியங்கள் என்பதை உணவுப் பொருட்கள் என்று ஏமாற்றி, அவைகள்மீது விற்பனை வரியை நீக்கினுல் அரசாங்கத்திற்கு அதனுல் ஒரு சில இலட்சம் ரூபாய்தான் வருமானம் குறையும்.

"ஆனுல் மக்கள் சாப்பிடுகின்றபோது அரசாங்கத்தை மனதார வாழ்த்துவார்கள். உணவைச் சாப்பிடுகின்ற நேரத்தில், 'நல்ல சர்க்கார் நாட்டில் நிலவுகிறது—நல்ல அமைச்சரவை நாட்டை ஆளுகிறது—உணவுப் பொருள்கள்மீது வரியை எடுத்து விட்டார்கள்' என்று மனமார வாழ்த்துவார்கள்.

"சட்ட சபையில் பலர் வந்து போகிருர்கள்—ஜனநாயகத்தின் பரிசாக அவர்கள் இதை மதிப்பார்கள்; முதல் கவளத்தில் முதலமைச்சரை வாழ்த்துவார்கள்; இரண்டாவது களத்தில் நிதி அமைச்சரை வாழ்த்துவார்கள்."

(இந்த நேரத்தில் 'மூன்ருவது கவளத்தில் இதை எடுத்துச் சொன்னவரை வாழ்த்துவார்கள்" என்று கூறியதும் அவையில் பெருத்த சிரிப்பொலி எழும்பியது!)

—சட்ட சபையில் அறிஞர் அண்ணு

★ காகிதப் பூ மணக்காது! ★

அன்புள்ள பொன்முடி!

அம்பலக்காரன்
அம்பிகா
ஆண்டிப்பண்டாரம்
பண்டாரி
போயா
இருளன்
மருத்துவர்
இசைவேளாளர், மேளக்காரர் (தஞ்சை மாவட்டம்)
ஒட்டர்
நரிக்குறவன்
படையாச்சி
சோழியச்செட்டி
கிராமணி, சாணன்
தொண்டமான்
வலையன்
வண்ணான்
குசவன்
நாவிதன்

என்னப்பா, ஒரே ஜாதிப் பெயர்களாக அடுக்கிக்கொண்டு போகிறாய் என்று ஆச்சரியப் படுகிறாயா? மத்தியசர்க்கார் மிகவும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் என்பதற்கு ஒரு பட்டியல் தயாரித்து அதில் ஐம்பத்தெட்டு பிரிவினரைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தப் பின் தங்கிய வகுப்பினரைப்பற்றி சட்டசபையில் எழுந்த கேள்விகளுக்கும் அந்தக் கேள்விகளில் அவர்களுக்கென வழங்கப்பட வேண்டிய சலுகைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டதற்கும் திரு. கக்கன் அவர்கள் வழக்கமான பதிலையே தந்தார்:

"இதர சலுகைகள் அளிப்பது பற்றி மத்திய அரசாங்கத்தைக் கலந்தாலோசித்தே முடிவு செய்ய வேண்டும். பின் தங்கிய வகுப்பினருக்கென்று தொழில் கல்லூரியிலும் கல்வி ஸ்தாபனங்களிலும் தனியாக இடம் ஒதுக்குவதென்பது அரசியல் சட்டப்படி தற்போது முடியாது. ஆகவே இது பற்றி மத்திய சர்க்காரை கலந்து பரிசீலித்தே முடிவு செய்ய வேண்டும்."

பார்த்தாயா பொன்முடி: எதற்கெடுத்தாலும் முடிவு வழங்குகிற அதிகாரம் டில்லியிடம் இருக்கிறது என்று நாம் சுட்டிக்காட்டினால், உடனே நிதி அமைச்சருக்குக் கோபம் உடைப்பெடுத்துப் பெருகுகிறது. முகம் சிவக்கச் சிவக்க வார்த்தைகளைப் பொழியத் துவங்குகிறார். தொலைவிலே கேட்டுக் கொண்டிருந்த பிரிவினை முழக்கம் கோட்டைக் கதவையே தட்டி, கேளாச் செவிகளிலேப் போர்க் கீதமாக ஒலிக்க ஆரம்பித்ததும், வடநாட்டு ஏவலர்களுக்கு, வரம் கேட்டு மண்டியிட்டு வணங்கிடும் "குணாளர்" களுக்குச் சினமும் சீற்றமும் எழத்தான் செய்யும். எதிர்பார்த்ததுதான் அது!

எதிர்க் கட்சிகள் பொதுவான யோசனைகளை, அதுவும் உருவான யோசனைகளைச் சொல்லட்டும்—நாங்கள் அதை ஒப்புக் கொண்டு ஆவன செய்யத் தயாராயிருக்கிறோம் என்று மந்திரிகள், அவையிலே அறநெறி போதிக்கும் வேளையில் கேட்போருக்குச் சிறிது மகிழ்ச்சிகூடப் பிறக்கும். என்ன பெருந்தன்மை எத்தகைய பெரிய மனது என்றெல்லாம் போற்றவும் செய்வர்!

தாய் தமிழில் உயிர் எழுத்துக்கள் பதின்மூன்று என்கிறாள்; இல்லையம்மா; பனிரெண்டுதான் என்கிறது அருகேயுள்ள குழந்தை! அதைக் கேட்டதாய், தன் குழந்தையைத் தழுவி முத்தம் பொழிவாளே தவிர, என்ன சொன்னாய்? தாயின் பேச்சுக்கு மறுப்பா?—எனத் தாண்டிக் குதித்து அதன் அழகான கன்னத்தைத் தன் பற்களால் காயப்படுத்திவிட மாட்டாள்!



தாய், முத்தம் தான் கொடுப்பாள்; தவறு தலை இடித்துக் காட்டிய தன் குழந்தைக்கு! கனிவான முத்தம் கொடுக்கும் தாயின் பண்பை எம்மிடம் எதிர்பார்க்கலாம் என்ற கருத்தினை ஆளும் கட்சியினர் தெரிவித்த போது சிறிது நம்பிக்கை நமக்குக் கூடப் பிறந்தது உண்மைதான்!

ஆனால் அந்த நம்பிக்கை நிலைக்கவில்லை யென்ற உண்மையை கடிபட்ட கன்னத்தைத் தடவிக்கொண்டே உனக்குக் கடித மூலம், தெரிவிக்கிறேன்.

தாயின் பண்பை, தனக்கு நிகரில்லை யெனும் ஆணவம் பிடித்து அலைபவரிடம் எதிர் பார்த்தது தவறுதானே!

எதிர்க் கட்சிகள் எடுத்துரைக்கும் நியாயமான குறைகளைத் தீர்ப்பதாகப் பறைசாற்றியவர்களின் எண்ணம் ஒரு இருட்டறை என்பதற்கு ஒரு சிறிய எடுத்துக்காட்டைத் தந்திட விரும்புகிறேன்.

பின் தங்கிய வகுப்பாரின் பட்டியலை சட்டசபையில் சமர்ப்பித்தபோது கேள்வி நேரத்தில் அமைச்சர் கக்கன் அவர்களைப் பார்த்து நான் கேட்டேன்; மிகப் பணிவாக... குற்றம் கூற வேண்டுமென்ற நினைவில் கூட அல்ல......

"பட்டியலில் பின் தங்கிய வகுப்பாரைப்பற்றிக் குறிப்பிடும்போது, சாணான், வண்ணான், குசவன் என்றெல்லாம் அச்சியற்றப்பட்டிருக்கிறதே அதை சாணார், வண்ணார், குயவர் என்று மாற்றியமைக்கலாமா?" என்று!

அதற்குக் கக்கன் பதில் சொன்னார்: 'மேலிடத்திலேயே மத்திய சர்க்காரின் கமிஷன் வகுத்த ஜாபிதாவின் படியே நமது பட்டியல் தயாரிக்கப்பட்டது!" என்பதாக!

பார் பொன்முடி: "ன்" என்பதற்குப் பதில் "ர்" போடுவதற்கும் மத்திய சர்க்கார்தான் வழிகாட்ட வேண்டுமாம்!

கக்கன் கூறிய பதில் போதாது என்று கருதியோ என்னவோ, நிதி மந்திரியார் எழுந்து—

"டிரைவர் என்றால் மதிப்பு உயர்ந்து விடும் என்று நினைத்து டிரைவன் என்று அழைத்தாராம் ஒருவர்"

என்று கேலி புரிந்தார்.

அவரையே அவர் கேலி புரிந்து கொண்டார் என்றுதான் கூறவேண்டும். டிரைவர் என்பது ஆங்கிலச் சொல், நான் குறிப்பிட்டுக் கேட்டதோ சாணான், வண்ணான் என்ற தமிழ்ச் சொற்களைப் பற்றி! அதுமட்டுமல்ல; என் கேள்விக்கும் அவர் பதிலுக்கும் தொடர்பே இல்லை.

நான் மீண்டும் விளக்கினேன்: பட்டியலில், மருத்துவர், இசை வேளாளர் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறதே—அதுபோலவே சாணார் வண்ணார் என்று ஏன் குறிப்பிடக் கூடாது என்று! நிதி அமைச்சர், காரசாரமாகப் பேசத் துவங்கி, "ன்" என்று இருப்பதால் மதிப்பு ஒன்றும் குறைந்துவிடாது; "ர்" என்பதால் மதிப்பு அதிகமாகியும் விடாது!" எனத் தன் வெறுப்பைத் தெரிவித்துக்கொண்டாரே தவிர, திருத்தம் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதானே யென்ற தெளிவைப் பெறவில்லை. எதிர்க் கட்சியினர் எது சொன்னாலும் அதை மறுக்க வேண்டுமென்ற ஏகாதிபத்ய மனப்பான்மை—சர்வாதிகாரப் போக்கு குடிகொண்டவர்களிடத்திலே நல்ல பதிலை எப்படி எதிர் பார்க்க முடியும்!

அமைச்சர் குழுவிலே இருப்பவர்களை வெங்கட்ராம அய்யன் என்றோ, சுப்பிரமணியக் கவுண்டன் என்றோ, பக்தவத்சல முதலி என்றோ அழைக்க முடியாது. அப்படி அழைப்பது மதிப்புக் குறைவு என்று அவர்களாலேயே கருதப்படும். அவர்கள் சாதியின் பெயரைத் தங்கள் பெயரோடு இணைப்பதில்லை; அதனால் இந்தப் பிரச்சினை எழாமலிருக்கலாம்.

ஆனால் அவர்கள் சார்ந்துள்ள சாதியினர், அந்த "ன்" என்ற எழுத்தை விரும்புவார்களா? நிச்சயம் விரும்பமாட்டார்கள். அமைச்சர்களுமே கூட அவர்கள் சாதியினரை அப்படி அழைப்பது தவறில்லை யெனக் கூறிடார். ஆனால், காமராசர் அவர்கள் சார்ந்துள்ள சாதியினருக்கு 'ர்' தேவையில்லை; 'ன்' இருப்பதில் தவறுமில்லை யென்று சுப்பிரமணியம் (கவுண்டர்) வாதாடுகிறார்.

சாதிகள் அடியோடு ஒழிந்து பூண்டற்றுப் போய்விட வேண்டுமென்று நாம் முழங்கு

❋ 12-ம் பக்கம் பார்க்க

வடாற்காடு மாவட்ட
தி. மு. கழக
மூன்றாவது மாநாடு!
ஆகஸ்ட் 17, 18 தேதிகளில்
திருவண்ணாமலையில் நடைபெறும்.
தலைவர்:
அம்பில்-தர்மலிங்கம்
திறப்பாளர்:
கிருஷ்ணமூர்த்தி பி. ஏ. [ஹானர்ஸ்.,]
கட்டணம்: ரூ. 5, 3, 1.
—முல்லை சத்தி (வரவேற்புக்குழுத் தலைவர்)
—ப. உ. சண்முகம் எம். எல். ஏ.
—எம். பி. சாரதி எம். எல். ஏ.
[செயலாளர்கள்]

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்வோம்!

* 4-ம் பக்கத் தொடர்ச்சி

சுப்பிரமணியம் சொன்னார்—"இவர்கள் கேட்கிற திராவிட நாடு கவைக்குதவாதது இதில் ஒன்றும் அர்த்தம் இல்லை. மறுபடியும் நாடு துண்டாடுவதற்கு நாங்கள் சம்மதிக்கப் போவதில்லை," என்றெல்லாம் காரசாரமாகப் பேசிக்கொண்டு வந்தவர், மெள்ள மெள்ள தன்னுடைய சுருதியை மாற்றி, வார்த்தைகளை வேறு பக்கமாகப் போட்டு, "இப்போதைக்கு மற்றொரு துண்டு போடப் போவதில்லை" என்றார்.

முதலிலே நாடு துண்டுபோடப்படமாட்டாது என்று சொன்னார்; இரண்டாவது வாசகம் இப்போதைக்கு அது கிடையாது என்று மாறியது. அதற்கு அடுத்த வாசகம்—"இந்த எதிர்க்கட்சிக்காரர்களை—குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகக்காரர்களை நான் என்ன வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்றால், இந்தப் பிளவு மனப்பான்மையை விட்டு விடுங்கள்! விட முடியவில்லை என்றாலும் ஒரு பத்து வருடத்திற்காவது இதை விட்டு வையுங்கள். அதன் பிறகும் தமிழ்நாடு முன்னேறவில்லை; அப்போதும் வடநாட்டு ஏகாதிபத்தியத்தால்தான் தமிழ்நாட்டுக்குக் கேடு என்ற நிலை இருந்தால், நீங்கள் மட்டும் என்ன; நானும் உங்கள் கூடவே சேர்ந்து போராடுகிறேன்! அப்போது பார்த்துக் கொள்ளலாம்!" என்று எங்களைப் பார்த்துச் சொன்னார்.

நான் அதனை அவர் என்னைப் பார்த்து விட்ட சவால் என்று கருதவில்லை; உண்மையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆளும் கட்சிக்காரர்கள் செலுத்துகின்ற கண்ணியமான காணிக்கை என்றே கருதினேன்.

பத்து வருடம் சும்மா இருங்கள் என்று அவர் சொன்னதற்குக் காரணம் என்ன? நல்ல வித்வான் யாராவது பாடிக் கொண்டிருக்கிற நேரத்தில், சங்கீதத்திலே மிகவும் லயித்திருக்கிறவன், சபையிலே தனியே இருவர் பேசிக்கொண்டிருந்தால், அவர்களைப்பார்த்து "அப்பா, அப்பா! இரண்டு நிமிடம் சும்மா இரு; பாடி முடிக்கட்டும்!" என்று கெஞ்சுவான். அந்த முறையிலேதான் ஏதோ ஒரு நல்ல காரியத்திலே ஈடுபட்டிருக்கிறார் சுப்ரமணியம்! இப்போது நான் அவருக்கு வக்கீலாகப் பேசுகிறேன். அந்தநல்ல காரியத்தில் அவர் ஈடுபட்டிருக்கிற நேரத்தில், சங்கீதம் நடக்கும்போது சள சளவென்று பேசும் இருவரைப் போல், கருணாநிதியும், நெடுஞ்செழியனும், மற்றவர்களும் ஊரிலே பேசிக் கொள்ளுகிறார்கள். ஆனால் நிதி அமைச்சர் என்னைப் பார்த்துச் சொல்லுகிறார், "அந்த சங்கீதம் காதிலே விழட்டும்! அவர்களைக் கொஞ்சம் பேசுவதை நிறுத்தச் சொல்லுங்கள்!" என்று! நான் அவரை திருப்பிக் கேட்க வேண்டியதெல்லாம், "ஐயா, அவர்கள் பேசுவதை நிறுத்தச் சொல்கிறேன்; ஆனால் நீங்கள் கேட்கிற சங்கீதம் எப்படி இருக்கிறது என்பது கொஞ்சம் என் காதிலும் விழட்டும்!" என்பதுதான்! இதிலே பத்து வருடம் என்று அவர் குறிப்பிட்டதற்குப் பொருள் விளக்கவில்லை; நானாக ஊகித்துக் கொண்டேன்; சென்னை சட்ட சபையிலே ஒரு ஐந்து வருடம் நிதி மந்திரி—இந்த ஐந்து வருடம் முடிந்ததும் டெல்லியிலே போய் ஒரு ஐந்து வருடம் நிதி மந்திரி—ஆக "இரண்டு ஐந்து வருடத்திற்கும் எனக்கு 'லைசென்ஸ்' கொடுத்துவிடு அண்ணாதுரை! இரண்டு வேலையையும் பார்த்தான பிறகு திரும்பி வருகிறேன். பிறகு பார்த்துக்கொள்ளலாம்; நீயும், நானும் ஒன்றாகவே சேர்ந்து தொலைப்போம்!" என்று கேட்கிறாரோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது என்றால்!

அதுதான் அவருடைய ஆசை என்றால், பத்து வருடமல்ல; பதினைந்து வருடம்கூட காத்திருக்கலாம்! ஏனென்றால், பதவியிலே இவ்வளவு ஆவல் படைத்தவருக்கு நம்மாலும் பத்து வருடத்திற்கு 'சான்ஸ்' கிடைக்கிறது என்றால், நல்லதுதானே! ஆனால் அப்படி அவர் சொல்லவில்லை; சொல்லாத காரணத்தால் அப்படி இருக்கக்கூடுமோ என்று நான் கருதினேன். ஆனால் உண்மையில் பத்து வருடத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகம் இந்தப் பிரிவினை பேச்சை பேசாமல் இருக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் குறிப்பிடுவது விந்தையிலும் விந்தை!

சரித்திரத்திலே படித்திருக்கலாம், 'பத்து வருட சமாதான ஒப்பந்தம்' என்று! அதாவது இங்கிலாந்திற்கும், ஜெர்மனுக்கும் சண்டை நடந்த காலத்தில்—சண்டை நடக்கும் போல இருந்த காலத்தில்—'சேம்பர்லின்' என்ற முதல் மந்திரி ஜெர்மனிக்குச் சென்று, "மியூனிச்" நகரத்திலே ஜெர்மன் ராணுவ வீரர்களையும் தலைவர்களையும் சந்தித்து—நமக்குள்ளே நாமே ஒரு சமாதானம் செய்து கொள்ளலாம்; இப்போதைக்கு சண்டை வேண்டாம் என்று கையெழுத்து போட்டுவிட்டு வந்தாராம்.

அந்த வார்த்தையை உபயோகப்படுத்தி, நிதி அமைச்சர் சமாதான பாணியில் கேட்டதால், நான் அவரைக் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்; அவருக்குக் கூறும் பொறுப்பும் எனக்கு இருக்கின்றது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சண்டை—நிதி அமைச்சர் சுப்பிரமணியத்திடம் அல்ல; சென்னை சட்ட சபையிடத்திலும் அல்ல; இங்கே இருக்கும் காங்கிரஸ்காரரிடத்திலும் அல்ல; கம்யூனிஸ்டுகளிடத்திலும் அல்ல: எங்கள் போராட்டம் அத்தனையும் ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற டெல்லி ஏகாதிபத்தியத்திடமாகும்!

எனக்கும் டெல்லிக்கும் சண்டை என்றால், இடையிலே நிதி அமைச்சர் 'சண்டையை நிறுத்திக் கொள்ளலாம்; சமாதானமாக இருக்கலாம் — என்பதிலே அர்த்தமில்லை. அப்படி அழைக்க வேண்டியவர் மேலே இருக்கிறாரல்லவா, 'ஆசியாவின் ஜோதி'-அவர்! அவர் அழைக்கமாட்டார்; ஏனெனில் அந்த அளவுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் உருவம் வளரவில்லை!

ஆனால் ஒரு நாள் அவர் அழைப்பார்; ஏனெனில் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அளவுக்கு வளரும்! திராவிட முன்னேற்றக் கழகம் அந்த அளவுக்கு வளரும்; ஏனெனில் நீங்கள் அந்த அளவுக்கு ஆதரவு தருவீர்கள்!

மேலும் அன்று சட்ட சபையிலே பேசும்போது நிதி அமைச்சர் எங்களைப் பற்றி இரண்டு குற்றச் சாட்டுகளைக் கூறியிருக்கிறார். பத்திரிகைகளில் அவ்வளவு தெளிவாக வரவில்லை; சபையில் இருந்தோருக்கு மட்டுமே தெரிந்திருக்கும்; ஆகவே வெளிப்படையாக நான் சொல்லுகின்றேன்.

முதல் குற்றச்சாட்டு—எங்களுக்கெல்லாம் அனுபவமில்லை என்பது. "பட்ஜெட்டைப் பற்றி கருணாநிதி பேசினார்; அண்ணாதுரை பேசினார்; ஆசைத்தம்பி பேசினார்; இன்னும் யாராரோ பேசினார்கள். ஆனால் பாவம், இவர்களுக்கு அனுபவமில்லை. அதன் காரணத்தால் எதை எதையோ பேசினார்கள்" என்றார். அனுபவமில்லை என்று ஒருவர் இன்னொருவரைப் பார்த்துச் சொல்வது ஒரு பெரிய குற்றமல்ல; அறிவு இல்லை என்று சொன்னால் வெட்கப்பட வேண்டும்! அனுபவமில்லை என்று சொன்னால், அறிவு இருக்கிறது; இன்னும் கொஞ்சம் நாளாகவேண்டும்—என்பதுதான் பொருள். அந்த முறையிலே அவர் எங்களுக்கு அனுபவமில்லை என்று சொல்லி முடித்த நேரத்தில், என்னுடைய கண்கள் எங்கே பாய்ந்தன என்பதை அவர் கூர்ந்து கவனிக்கவில்லை. நான் யாரைப் பார்த்தேன், என்றால், எங்களைவிட அனுபவத்தில் குறைவு பெற்று, ஆனால் எங்களைவிட பெரிய மந்திரிப் பதவியிலே இருக்கின்ற கக்கனைப் பார்த்தேன்; காமராசரைப்

* 9-ம் பக்கம் பார்க்க

"மணிமகுடம்"

வியாபாரிகளுக்கு அறிவிப்பு !

★

நான் எழுதியதும், எனக்கே முழுஉரிமையுடையதுமான "மணிமகுடம்" நாடக நூலை திருச்சி முத்துவேல் பதிப்பகத்தாருக்கு வெளியிடும் உரிமை அளித்து, அவர்களும் அதை நன் முறையில் வெளியிட்டு விற்பனை செய்து வருகிறார்கள்.

இதற்கிடையே இழிகுணம் படைத்த விலைமகள் பண்பினர் யாரோ, என் அனுமதியின்றி குலவணிகபுரம், முகில் பதிப்பகம் என்ற பெயரில் "மணிமகுடம்" நாடக நூலை எட்டணா விலையில் மிக மட்டமாக வெளியிட்டு, நாடகத்திலுள்ள காட்சிகள் பலவற்றையும், உரையாடல்களையும் சிதைத்து, என்னிடம் அனுமதி பெற்றிருப்பதாகவும் கூறிக் கொண்டு அந்தப் புத்தகத்தை கள்ளச் சந்தையில் விற்று வருகிறார்கள். அதில் அச்சகத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவர்கள்மீது சட்டப்படி கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதால் அந்த நூலை வாங்கி வியாபாரம் செய்யும் கடைக்காரர்களும் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்று எச்சரிப்பதோடு, கடந்த சில மாதங்களுக்குமுன் இதுபோல என் பெயரால் ஒரு புத்தகம் வெளியிட்டவர் போலீசாரால் கைது செய்யப்பட்டு, கடைகளிலும் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்ட செய்தியையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். பொதுமக்களும் அந்தக் கேவல மதியினருக்கு புத்தி புகட்டும் வகையில் அவர்களின் அநாகரிகச் செயலை ஆதரிக்காதிருக்குமாறு பெரிதும் வேண்டுகிறேன்.

அன்புள்ள,
மு. கருணாநிதி.

✻ 5-ம் பக்கத் தொடர்ச்சி

வீட்டுக்கு வாருங்களேன்,'' என்றாள் நிர்மலா!

''நானும் ஆங்கில இலக்கிய வகுப்பில படிக்கும் என் நண்பர் ஒருவரைப் பார்க்க அண்ணாமலை நகருக்குத்தான், வருகிறேன்,'' என்றேன். நான் கூறியது பச்சைப்பொய். என் நண்பர் ஒருவர் அங்கே படித்துக் கொண்டிருப்பது உண்மை! ஆனால் நான் அவரைப் பார்ப்பதற்காகத்தான் அப்பொழுது போய்க் கொண்டிருக்கிறேன் என்பது அசல் பொய்!

அவளுடைய கணவர் கணபதியும், ''மிகவும் நல்லதாய்ப் போய் விட்டது; சேர்ந்தே போகலாம்!'' என்றார்.

பொய்யைச் சொல்லி விட்டேன். என் மனம் பட்ட வேதனையைச் சொல்லி முடியாது. நான் ஏன் பொய் சொன்னேன்? நிர்மலா யார்? நான் யார்? அன்னியோன்யமாக வாழும் இந்த இளந்தம்பதிகளிடையே சலனத்தைத் தோற்றுவிக்க எனக்கு என்ன உரிமையிருக்கிறது? கணபதியின் அன்பு தவழும் பேச்சு என்னை ஈட்டி கொண்டு குத்தியது. டன்கனை நள்ளிரவில் கொலை செய்யச் சென்ற மாக்பெத்தின் மனப்போராட்டம்—சஞ்சலம்—ஆகியவற்றை நானே அனுபவித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய நேர்மையற்ற பண்பில் எனக்கே வெறுப்பு தோன்றியது. ரயில் செல்லும் பொழுது, அடுத்த ஸ்டேஷனில் இறங்கி, ரயிலைத் தவற விட்டு விட்டதாகப் பிறகு பொய் சொல்லிவிடலாமா என்றுகூட நினைத்தேன்...ஆனால்...

இதோ, ரயிலில் எனக்கு எதிரில் கணவனோடு அமர்ந்திருந்தும் கடைக்கண்ணால் என்னைக் கண்டு மகிழும் நிர்மலா—அந்த உதடுகளில் படர்ந்து பரவசப்படுத்தும் புன்னகை—கண்களில் பொங்கிப் பிரவகிக்கும் கற்பனை வெள்ளம்—அழகுத் திரளாக அருகில் அமர்ந்து எழுத்தாளனின் சிந்தனையில் கற்பனையை ஊற்றெடுக்கச் செய்ய வேண்டியவள், யந்திரம்போல் அலுவலகத்தில் வேலை செய்யும் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு வாடுகிறாள்! என்ன சமுதாயம்......என்ன ஒழுக்கம்...என்ன கட்டுப்பாடு வேண்டிக் கிடக்கிறது...என் மனம் கதி தவறி நிலையற்று ஓடிக் கொண்டிருந்தது!

* * *

நான் தூங்கிக் கொண்டிருந்தேன். கண் விழித்தேன். சோம்பல் முறித்துக் கொண்டேன். நிர்மலா வீட்டிற்கு நான் விருந்தாளியாக வந்து நான்கு மணி நேரமாகிறது. நான் தூங்கியதைத் தவிர குறிப்பிடத்தக்க சம்பவம் ஏதும் நிகழவில்லை!

கடிகாரத்தைப் பார்த்தேன். சாயங்காலம் மணி நான்கு. முகத்தைக் கழுவிக் கொண்டு நாற்காலியில் அமர்ந்தேன். புன்முறுவல் தவழ சூடான தேநீரை எடுத்துக் கொண்டு என்னை நோக்கி வந்தாள் நிர்மலா.

''கணபதி எங்கே?'' என்ற அசட்டுத்தனமான கேள்வியைக் கேட்டேன்.

''ஃபோனில் கூப்பிட்டார்கள், ஆஃபீசுக்குப் போயிருக்கிறார்கள்,'' என்று பதிலளித்து விட்டுத் தேநீர்க் கோப்பையை என்முன் நீட்டினாள்.

வேண்டுமென்றே என் கரம் அவள் விரல்களைத் தீண்டும்படியாக கோப்பையை வாங்கிக் கொண்டு அவள் முகத்தைப் பார்த்தேன். அவள் முகத்தில் சலனமின்றி வழக்கமான புன்னகையே பரவி நின்றது.

கண்களால் அவள் அழகை விழுங்கியபடியே தேநீரைப் பருகினேன். அவளும் என்னையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டு நின்றாள். தேநீரைக் குடித்தவுடன் கோப்பையை வாங்கக் கரத்தை நீட்டினாள், மீண்டும் என் விரல்கள் அவள் விரல்களைத் தீண்டின. என் உடலெங்கும் இன்பம் இழையோடியது. அவள் முகம்...அதே புன்னகை!

அவள் போகத் திரும்பினாள்.

''நிர்மலா!'' — உள்ளத்தின் அடித் தளத்திலிருந்து ஈனஸ்வரத்தில், துடிக்கும் உதடுகளினிடையே அந்த வார்த்தை மெள்ள வெளிவந்தது.

அவள் லேசாகத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். தாமரை மலரில் படபடவென்று சிறகடிக்கும் இரு கருவண்டுகள்—இரு கருவிழிகள்—ஜீவ ஒளி வீசிக் கொண்டிருந்தன. நான் நானாக இல்லை! என் கரங்கள் அவளை அருகே இழுத்து....

அவள் திமிறிக் கொண்டு விலகினாள். அதிர்ச்சியடைந்து அவளைப் பார்த்தேன். கருவிழிகளில் ஒளியில்லை; அனல் வீசியது. நான் தலை கவிழ்ந்தேன்.

''நிர்மலா!'' — வாயிற்படியிலிருந்து ஒரு குரல் அவளை அழைத்தது. அன்பின் குழைவு அதில் இருந்தது. ''இதோ வந்து விட்டேன்,'' என்று கூறிக் கொண்டே வாயிற்படியை நோக்கி விரைந்தாள். நானும் பின் தொடர்ந்து சென்றேன். நிர்மலாவின் கணவர் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தார். நிர்மலா வேகமாக ஓடி அவருடைய கோட்டை கழட்டிவிட்டு மின்சார விசிறியைப் போட்டாள்.

''வந்ததும் வராததுமாக ஆபீசில் அப்படியென்ன வேலை?''—செல்லமாகக் கணவனைக் கடிந்து கொண்டாள்!

''இளம் மனைவியொருத்தி வீட்டில் தூண்டில் புழுவினைப் போல் துடிப்பாள் என்பது மேலதிகாரிகளுக்கு எங்கே தெரிகிறது?'' என்று அன்புடன் அவள் கன்னத்தைக் கிள்ளினார் கணபதி.

காதலறம் செழித்துச் சுரக்கும் உள்ளத்தில் கயமை நஞ்சைக் கலக்க எண்ணிய நான்... அயாகோவைச் சித்தரித்த ஷேக்ஸ்பியர், என்னைப் போன்ற ஒருவனைச் சந்தித்திருக்க வேண்டும்!

உள்ளே வந்த கணபதி என்னைப் பார்த்தவுடன், ''என்ன எழுத்தாளரே! நல்ல தூக்கம் போலிருக்கிறது,'' என்றார்.

''ஆமாம்'' என்று தலையசைத்தேன், அவரையோ நிர்மலாவையோ ஏறெடுத்துப் பார்க்கும் துணிவின்றி.

''அவர்கூட இன்று சாயங்காலமே ஊருக்குப் போக வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறார்,'' என்றாள் நிர்மலா.

நிர்மலாவாகவே கற்பனை செய்து சொன்ன இந்த விஷயம் எனக்கு அதிர்ச்சியை அளிக்கவில்லை. ஒழுக்கமுள்ள எந்தப் பெண்தான் என்னை வீட்டில் வைத்துக் கொள்ள இசைவாள்! என்னுடைய கண்ணியமற்ற போக்கைக் கணவனிடம் அவள் சொல்லாமல் இருக்க வேண்டுமே!

''என்ன அவசரம்?'' என்றார் கணபதி குழந்தைபோல!

''இல்லை, கட்டாயம் போக வேண்டும்!'' என்றேன் நான். அதுதானே நான் நிர்மலாவிற்குச் செய்யக்கூடிய பேருதவி!

* * *

சிதம்பரத்திலிருந்து ரயில் புறப்பட்டது.

எத்தனையோ கதைகள் எழுதுகிறேன்; எவ்வளவோ நூல்கள் படிக்கிறேன். தவறில்லாத முறையில் — ஒழுக்கம், முறைகெடாமல்—ஒரு பெண் ஆணிடம் அன்பு பாராட்ட முடியும் என்ற உண்மையை உணராத நான் எவ்வளவு பெரிய முட்டாள்!

நிர்மலா என்னிடம் காட்டிய அன்பு—தூய்மையானது—கணவனுக்குத் துரோகம் நினைக்காதது! அதில் புதிர் ஒன்றுமில்லை! என் கதைகளை ரசித்த அவள் என்னை நேசித்தாள். அது இயற்கையும்கூட! ஆனால் அந்தத் தூய அன்பை, முறை தவறிய வகையில் செலுத்த முயன்ற நான்...

திருவாரூர் ஸ்டேஷனில் ரயில் நின்றது. 'ஆண் பெண்களிடையே நிலவிடும் அன்பு எப்பொழுதுமே விபரீத நிலையில் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை!' என்ற உண்மையை உணர்ந்த நிலையில் வீடு நோக்கி நடந்தேன்.

நான் எழுதும் ஒவ்வொரு கதையையும் இப்பொழுதும் நிர்மலா பாராட்டிக் கடிதம் எழுதிக் கொண்டுதான் இருக்கிறாள். அவளது பாராட்டுரைகளில் — அன்புரைகளில் —புளகாங்கிதமடைகிறேன். முன்போல அல்ல; சகோதர உணர்ச்சியில்!

பீதி கிளப்புகிறார், நிதி அமைச்சர்!

''நிதி அமைச்சர் வரி போடாமல் இருப்பார் என்பதில் உண்மையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஏனென்றால், அவர்களுடைய வாக்கியத்தை நல்ல தமிழில் எழுதியிருக்கிறார் என்று உறுப்பினர்களனைவரும் பாராட்டினார்கள். தமிழ் எப்போதும் பொய்க்காது. தமிழில் இருக்கும் வாக்கியத்தைப் பார்த்தால் 'இந்த எண்ணத்தில் இப்போது எஞ்சிய பற்றுக்குறையை ஈடுசெய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்' என்று இரண்டு மூன்று ஆபத்தான பதங்களை மிக அழகாகவும் சாமர்த்தியமாகவும் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

''இதற்கு நேர்மாறாகப் பம்பாய் மாநில நிதி அமைச்சர் அவர்களும், இதேபோல, துண்டு விழுந்த பட்ஜெட் சமர்ப்பிக்கின்றபோது 'என்னுடைய மாநில மக்கள்மீது அதிகமாக வரி விதிக்கப்பட்டிருக்கிறது; புதிதாக மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியில் பெரும்பாகம்—அதாவது 40 சதவிகிதம்வரை என்னுடைய மாநிலத்திலிருந்து வசூலிக்கப்படும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகையால் வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதைச் சரிக்கட்ட நான் புதுவரித் திட்டங்கள் எதையும் போடவில்லை' என்ற காரணம் காட்டியிருக்கிறார்.

''ஆனால், இங்கே, நமது நிதி அமைச்சர் காரணம் காட்டவில்லை—காரணம் காட்டாதது மட்டுமல்ல—ஏன் காட்டப்படவில்லை என்று ஆவலோடு திட்டத்தை அலசிப் பார்த்தேன். காரணம் காட்டாததில் ஒரு பயம் பிறந்தது. கடைசியில் பார்க்கும்போது, 'இந்த எண்ணத்தில் இப்போது எஞ்சிய பற்றுக்குறையை ஈடுசெய்யாமல் தற்காலிகமாக விட்டுவிடுவது நியாயமாகும் என்ற முடிவிற்கு வந்திருக்கிறோம்' என்று கூறியிருப்பதைக் கண்டு அதில் 'தற்காலிகமாக' என்றிருப்பதாலேயே, 'இந்த ஆண்டுதான் அங்கிருந்து (டில்லி) விழுந்திருக்கிறது அடி; அந்த அடியின் தழும்பே இன்னும் மறையவில்லை; அடுத்த ஆண்டு நான் தருகிறேன்; அதுவரையில் பொறுங்கள்; என்று அடுத்த ஆண்டுக்கு மக்களைக் காக்க வைக்கிறார் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது!''

—சட்ட சபையில் அறிஞர் அண்ணா

குறள் உணரா அமைச்சர் - தமிழ்க் கொலை புரியும் விந்தையே விந்தை!

✻ 7-ம் பக்கத் தொடர்ச்சி

பார்த்தேன்; ராமையாவை—வெங்கட்ராமனைப்பார்த்தேன்! அந்தப் பார்வைக்கு என்ன பொருள்? 'பார்; இந்த சுப்ரமணியம் எங்களைத் திட்டுவதாகக் கருதுகிறாய், அனுபவமில்லை என்று! அது அவர் உங்களை எல்லாம் சேர்த்துத்தான் சொல்லுகிறார். எங்களுக்கும் அனுபவமில்லை; உங்களுக்கும் அனுபவமில்லை; நீங்கள் அங்கே இருப்பதால் மந்திரிகளாக இருக்கிறீர்கள்;நாங்கள் இங்கே இருப்பதால் எங்களை கேலி செய்கிறார்! இவ்வளவுதான் வித்தியாசம். அதனால் கோபம் எனக்கு மட்டுமல்ல; உங்களுக்குந்தான்; உங்களுக்கும்தான்!' என்று நான் அவர்களைப் பார்த்தேன். என் பார்வையின் பொருள் சில மந்திரிகளுக்கு விளங்கிற்று; விளங்காதவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்ற நேரத்தில் விளங்க வைக்கிறேன்.

ஆனால் அனுபவமில்லையென்று சொன்ன நிதி அமைச்சர அனுபவம் பெற்றிருக்காத காலம் ஒன்று இருந்தது. முதல் தடவையாக நிதி மந்திரியாக சென்னை சட்ட சபையிலே உட்கார்ந்தாரே, அப்போது யாராவது அவரைக் கூப்பிட்டு, "நிதி அமைச்சர் வேலைக்கா வந்திருக்கிறீர்?" என்று கேட்க—"ஆம்" என அவர் பதில் தர—அடுத்தபடியாக "எத்தனை ஆண்டு அனுபவம்?" என்ற வினா கிளம்ப—"இல்லை" என அவர் விடை தந்திருந்தால்—"அப்படியானால் வெளியே போ" என்ற கட்டளையா உடனே பிறந்திருக்க முடியும்?

ஜனநாயகத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற பரீட்சை அனுபவம் இருக்கின்றதா, இல்லையா என்பதல்ல! ஆற்றல் இருக்கின்றதா இல்லையா? வாய்ப்பளிக்கப்பட்டால் அறிவால் அனுபவத்தைப் பெறுவானா, இல்லையா?—என்பதுதானே தவிர அனுபவம் பெற்றவனேதான் நாடாள வேண்டுமென்றால், இந்த நாட்டை ஆளுவதற்கு நம் எல்லோரையும்விட சர்ச்சிலுக்கு அதிக அனுபவம் இருக்கிறது—ஏற்றுக்கொள்ளுகிறோமா?

ஐசனோவருக்கு அதைவிட அதிக அனுபவம்—ஒப்புக்கொள்கிறோமா?

குருஷேவுக்கு அதிக அனுபவம்தான்—வரவழைக்கிறோமா?

ராஜகோபாலாச்சாரியாருக்கு நல்ல அனுபவம் உண்டு—பாபம், என்ன ஆனார்? எங்கே இருக்கிறார்?

ஆகையினால் அனுபவம் இல்லை என்று அவர் சொன்னது எங்களுக்காக அல்ல; பிறகு காங்கிரஸ் எம். எல். ஏ. க்களை சந்திக்கிறபோது "என்ன, அன்று அண்ணாதுரை ஏதேதோ பேசினானே; நீங்கள் என்ன பதில் தந்தீர்கள்?" என்று அவர்கள் கேட்டால், உடனே மந்திரி அவர்களது முதுகைத் தட்டி "கவனிக்கவில்லையா? சரியான பதில் தந்தேனே! அவர்கள் எல்லாம் கற்றுக்குட்டிகள்; அனுபவமில்லாதவர்கள்—என்று சரியாகச் சொன்னேனே!" என்று சிரித்துச் சொல்ல, "ஆகாகா! சரியாகச் சொன்னீர்கள்! உங்களுக்குத் தானே தெரியும்! பயல்கள் அப்படியே வெட்கித் தலை குனிந்து வெட வெடத்துப் போயிருப்பார்களே!" என்று அவர்களாகவே மகிழ்ச்சியோடு பேசிக் கொள்ள அது பயன்பட்டிருக்கலாம்.

அதை விட்டு நாட்டு மக்களிடம் போய் நமக்கு அனுபவமில்லை என்று சொன்னால், "அதிருக்கலாமய்யா! நாங்கள் அனுப்பியிருக்கிறோமே என். எஸ். ராமலிங்கம், அவருக்கு என்ன அனுபவமிருக்கிறது?" என்று நீங்கள் கேட்காமலா விடுவீர்கள்?

ஆகவே, அவர் பேசியதிலிருந்து எனக்குப் பட்டது—ஒரு தடவை அவர் வாத்தியாராக இருந்தார்! இரண்டாவது கட்டம் வக்கிலாக வடிவெடுத்தார்! மூன்றாவது படியில் வியாபாரியாக மாறினார்!

வாத்தியாராக இருந்த கட்டத்தில் எங்களை எல்லாம் உட்கார வைத்துக் கொண்டு "நீங்கள் எல்லாம் அனுபவமற்றவர்கள்! பட்ஜெட்டை இப்படிப் படிக்க வேண்டும்! பேச வேண்டும்!" என்று புத்தி கூறுவதைப்போல எங்களை மாணவராக எண்ணிப் பேசிப் பார்த்தார்.

பிறகு வக்கிலாக மாறிய போதுதான் அவரது திறமையை நான் பாராட்டினேன். அதை நம்முடைய தம்பிகளிடத்தில் கூடச் சொன்னேன். அவர்களுக்குக்கெல்லாம்கூட மிக்க வருத்தம்—என்ன, நான் சுப்பிரமணியத்தைப் பாராட்டுகிறேனே என்று! ஏனென்றால் அவர்களுக்கு என்னுடைய வாதத்தைக் கேட்டுக் கேட்டுப் பழக்கம். ஒன்று அவர்கள் மறந்து விடுகின்றார்கள்—நல்லதை வைத்துக் கொண்டு வாதம் செய்வது எளிது; தவறை வைத்துக் கொண்டு வாதம் செய்வது கடினம்!

பழத்திலே சுவை இருப்பது இயற்கை; காயிலேயே சுவை இருக்கிறது என்றால் அது ஆச்சரியம்!

அந்த முறையில் அப்பழுக்கற்ற நியாயம் இருக்கிறது நம்முடைய கொள்கையில்! ஆகவே அதை எடுத்து வாதிக்கின்ற நேரத்தில் நான் விவாதித்தாலும், வேறு யார் விவாதித்தாலும், நேற்று மேடை ஏறியவர் வாதிட்டாலும் அதிலே ஒரு மணிச்சரடுபோல் நியாயம் கோர்க்கப்பட்டிருக்கிறது.

ஆகவே வாதத் திறமை குறித்து எங்களைப் பாராட்டுவதில் அர்த்தமில்லை. ஒரு பெண்ணை நான் காட்டி 'இதோ பார், பெண்' என்று சொன்னதும், வடிவத்தைப் பார்த்தவுடன் நீங்கள் 'ஆம், பெண்தான்!' என்று தீர்மானித்துக் கொள்வதில் வியப்பில்லை. ஆனால் ஒரு ஆணைக் காட்டி, 'இதோ பார்' ஒரு பெண்!' என்று சொல்ல, 'பெண்ணா?' என்று நீங்கள் கேட்கிறபோது, 'மீசை இருக்கிறது என்று கருதிக் கொண்டிருக்கிறீர்களா? அது ஒட்டவைத்தது—கண் ஒரு மாதிரி இருக்கிறது என்று பார்க்கிறீர்களா? அந்தப் பெண் வேண்டுமென்றே அப்படிப் பார்க்கிறாள்—பெண்ணின் ஆடைகளாக இல்லையே என்கிறீர்களா? அது சர்க்கஸிலே வேலை செய்த பெண்'—என்று இப்படியே பேசிப் பேசி உங்களை நம்ப வைத்தால், அது தான் சாமர்த்தியம்! இந்த இரண்டாவது வக்கில்தான் நிதி அமைச்சர் சுப்பிரமணியம்! இல்லாததை இருப்பது போல மெய்ப்பித்து வாதிடுகிறார்; சொல்லாததை சொன்னதைப் போல எடுத்து வைத்துக் கொண்டு பேசுகிறார்!

அதை ஒப்புக்கொள்ள வேண்டுமாம், ஏன்? அவர் நிதி மந்திரி!—இது அவருடைய வக்கீல் வாதம்! இதைத்தான் நான் சாமர்த்தியம் என்று குறிப்பிடுகிறேன். சாமர்த்தியம் பல திறப்பட்டது!

இரும்புப் பூட்டை உடைக்கிற இருசப்பனும், கள்ளனைக் கண்டு பிடிக்கிற கான்ஸ்டேபிலும் சாமர்த்தியசாலிகள்தான்! இந்த இரு சாமர்த்தியத்துக்கும் வித்தியாசம் இல்லையா? அதைப்போல் நிதி அமைச்சருடைய சாமர்த்தியத்திற்கும், மற்றோருடைய சாமர்த்தியத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது.

சட்ட சபையில் ஒரு பெரிய தவறை அவர் செய்திருக்கிறார். நான் வேண்டுமென்றே மறுக்காமல் விட்டு வைத்திருக்கிறேன்; காரணமும் இருக்கின்றது. கருணாநிதி சட்டசபையில் பேசுகின்ற நேரத்தில் ஒரு திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசினார். அதிலே 'இரவு' என்று ஒரு வார்த்தை வருகிறது. அந்த வார்த்தை இடையின "ர" கொண்டது. சுப்பிரமணியம் பேசுவதற்கு முன்னால், மற்றொரு காங்கிரஸ்காரர் கருணாநிதியைக் கண்டிக்க வேண்டுமென்ற காரணத்தால், பொருள் தவறு என்கிறார். பிறகு பேசிய நிதி அமைச்சர் 'இரவு' என்பதில் இடையின "ர"வை வல்லின "ற" என்று அவராகவே எண்ணிக் கொண்டு "கருணாநிதி 'இரவை' 'இறவு' என்று சொன்னார். அவருக்கு வல்லினம் மெல்லினமே தெரியாமல் குறளை எல்லாம் பேசி விடுகிறார். வெளியே போய் அலசி விட்டேன்; ஆர்ப்பரித்து விட்டேன் என்றும் பெரிதாகப் பேசிக்கொள்கிறார்கள்' என்று கிண்டல் செய்தார்.

எனக்குக் கொஞ்சம் துடித்தது, எழுந்து உடனே நீர் சொல்லுவது தவறு என்று சொல்லிவிட. ஆனால் இவர்களுக்கெல்லாம் இல்லாத அடக்கம் எனக்கு உண்டு; காரணம் நான் நீண்ட தூரத்திற்குப் பின்னால் வரக் கூடியதை யோசிப்பதில் கொஞ்சம் பொறுப்பேற்றுக் கொண்டிருப்பவன். ஆகவே சும்மா இருந்தேன். கருணாநிதி சொன்ன குறளும், இடையினத்தை வல்லினமாக மாற்றிச் சொன்ன நிதி மந்திரியாரின் பேச்சும் சர்க்காரின் சட்டப் புத்தகத்திலே அச்சாகப் போகிறது!... நாட்டு மக்களின் கவனத்திற்கு வரத்தான் போகிறது!

இப்படியாக வக்கீல் வேலை புரிகிற சுப்பிரமணியம் அடுத்த கட்டத்தில் வியாபாரியாக மாறி "உங்களுக்குத் தமிழ்நாடு தானே வாழ வேண்டும்? அதற்கு நீங்களும் நானும் ஒப்பந்தம் செய்து கொள்வோம்—பத்து வருடங்களுக்கு சும்மா இருங்கள்!" என்று பேரம் பேசியிருக்கிறார்.

அவர் எங்களுக்கு புத்திமதி சொல்வதாக எண்ணிக் கொண்டு ஒன்று சொன்னார், "நீங்கள் எல்லாம் மேடையிலே பேசுவதைப்போல பேசுகிறீர்கள்; அப்படிப் பேசக்கூடாது" என்றார். அப்படி ஒரு விதி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை! அது மட்டுமல்லாமல், மேடைப் பேச்சு என்னவோ 'பஞ்சமாபாதகம்' போலவும், அதை உள்ளே நுழையவிடாது வெகுகாலமாக தடுத்து வந்திருப்பது போலவும் சொல்கிறார்.

✻ 10-ம் பக்கம் பார்க்க

முரசொலி சந்தா விபரம்

உள் நாடு		வெளி நாடு	
ஆண்டு சந்தா	6—50	ஆண்டு சந்தா	7—50
ஆறு மாதம்	4—00	ஆறு மாதம்	4—50

அடுக்கு மொழி பேசும் ஆரணங்குகள்-நம்மை அடக்கிட ஏவப்படும் அம்புகளாம்!

❊ 9-ம் பக்கத் தொடர்ச்சி

அது மட்டுமல்லாமல், சட்டசபை கூடுவதற்கு முன்னால் சென்னை கடற்கரைக் கூட்டத்திலே சொன்னார்கள், "அண்ணாதுரைக் கூட்டத்தார் ஏதோ அடுக்கு மொழியில் வல்லவர்கள் என்கிறார்கள். வரட்டும்! எங்களிடமிருக்கும் ஆரணங்குகளும் அடுக்குமொழி பேசுவார்கள்! அவர்களை விட்டே அக்கும்பலை அடக்கச் சொல்கிறேன்!" என்றார்களே. அப்போது அந்த அடுக்குமொழியைத்தானே வரவேற்றார்கள்; உள்ளே விட்டார்கள்!

'பெண்களைவிட்டே இவர்கள் வாயை அடக்குவோம்!'—மந்திரிகள் சொன்னார்கள். இதிலே அவர்கள் யாருக்குப் பெருமை தந்தார்கள்? பெண்களை விட்டே அடக்குவோம் என்றால், பெண்கள் என்ன அவ்வளவு கேவலம் என்று கருதினார்களா? கேவலமாகக் கருதுகிறார்கள் என்று தெரிந்தும் பெண்கள் சிலர் சட்ட மன்றத்திலே உட்கார்ந்திருக்கிறார்களே, அவர்களை நினைத்தால் எவ்வளவு வேதனை உண்டாகிறது? அல்லது இவர்களால் நம்மை அடக்க முடியாததால் பெண்களை விட்டு அடக்கச் சொல்கிறார்களா? அல்லது நாங்கள் எங்களை யாராவது அடக்க வந்தால் எதிர்ப்போம்; ஒரு சமயம் பெண்களாக இருந்தால் இரக்கப்படுவோம் என்கிற நினைப்பா? இவையெல்லாம் எனக்குப் புரியவில்லை.

அது மட்டுமல்ல; யார் யார் சட்டசபையிலே திறமைசாலி என்று பெயர் பெற்றிருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேரும் மேடைப் பேச்சிலும் கெட்டிக்காரர்கள்தான்!

இங்கிலாந்து நாட்டின் பாராளுமன்றத்தின் மிகச் சிறந்ததலைவர் சர்ச்சில்—மேடையிலேயும் இடி முழக்கமென பேசுவதில் ஆங்கிலம்பேசுகின்ற உலக மனைத்திலும் அவருக்கு நிகர் வேறு யாரும் கிடையாது!

அதைப் போலவே காலம் சென்ற சத்தியமூர்த்தி—சர். ஏ. ராமசாமி முதலியார் போன்றவர்கள் மேடையிலும் சட்ட சபையிலும் மிக மிக அழகாகப் பேசுவார்கள்.

ஆனால் இவர்களுக்கோ நம்முடைய பேச்சு வேம்பாக இருக்கிறது! அதிலும் கருணாநிதியின் மீதுதான் நிதிமந்திரியாருக்கு அதிகக் கோபம்—கருணாநிதி பேசும்போது சென்னை மாநில அரசினர் டெல்லிக்கு எதற்கெடுத்தாலும் 'யாசகம், கேட்டுச் செல்கின்ற உரிமையில்லா நிலை குறித்து தனது பட்ஜெட் பிரசங்கத்தில் விளக்கியிருந்தார். அப்போது சட்டசபையிலே "வடக்கு வாழ்கிறது. தெற்கு தேய்கிறது!" என்று அவர், ஆதாரத்தோடு எடுத்துச் செல்ல—அங்கு பார்வையாளராக வந்திருந்த நம் தோழர்கள் கையொலி எழுப்ப—அதைக் கண்ட அமைச்சர்கள் ஏதோ 'இவர்கள் என்ன நம்முடைய செலவில் அவர்களுடைய பிரசாரத்தை நடத்திக் கொள்கிறார்கள்' என்று எண்ணுகிறார்கள். அது அவர்களுடைய செலவு அல்ல; நீங்களும் நானும் சேர்த்துக் கொடுக்கிற வரிப் பணத்திலேதான் சட்டசபை நடைபெறுகிறது!

நமது வளர்ச்சியின் காரணமாகத்தான் அவர்கள் மேடைப் பேச்சு கூடாது என்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால் கல்யாணமானவுடன் எந்தக் கணவனும் தன் மனைவி மிக மிக அலங்காரமாக இருக்க வேண்டுமென்றுதான் விரும்புவான். ஆனால் நாலைந்து வருடங்களுக்குப் பிறகு அது அவனுக்குப் பிடிக்காது பிடிக்காதது மட்டுமல்ல; "இதென்ன அலங்காரம்? ஏன் இவ்வளவு பவுடர்? கொஞ்சம் லேசாகப் போடக்கூடாதா? அதென்ன புது தினுசு ஜாக்கெட்?" என்று வீட்டில் கேட்பான். கேட்டுவிட்டு வெளியே போகிறபோது அத்தகைய அலங்காரங்களுடன் எங்கெங்கே பெண்கள் இருக்கிறார்கள் என்று அவனது கண்கள் தேடும். பெண்களைக் கூட அல்ல; சினிமா சுவரொட்டிகளிலேயே அத்தகைய அலங்காரத்தைப் பார்த்து ரசிக்கிறான்! அதைப்போல் காங்கிரசார் அழைத்து வந்திருக்கிற ஐந்தாறு பெண்களின் பேச்சு சுவரொட்டியைப் பார்த்து உள்ளம் மகிழ்வதைப் போல நிதி அமைச்சருக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது! மனைவியின் அலங்காரம் பிடிக்காததுபோல் எங்களது மேடைப் பேச்சு பிடிக்கவில்லை!

ஆனால், நாங்கள் அந்த பாணியை மாற்றிக்கொள்வதாக இல்லை. அந்த முறையை விட்டு விடுவதாக இல்லை. அந்த முறை பலிக்காது போனதில்லை. பலித்த காரணத்தால்தான் "இன்று போய் நாளைவா!" என்று இராமன் இராவணனிடம் இராமாயணத்திலே கூறியதுபோல, "ஒரு பத்து வருடம் இருந்துவிட்டு பதினோராவது வருடம் வாருங்கள்!" என்று சுப்ரமணியம் சொல்கிறார்.

ஆனால் ஒரு பெரிய உண்மை—அவரது அன்பையும் மீறி, அவரது வார்த்தையை மறுக்க வேண்டியிருக்கிறது! ஏனென்றால், எந்தப் பத்து வருடம் சும்மா இருக்க வேண்டும் என்று சொல்கின்றாரோ. அந்தப் பத்து வருடம் இந்தியத் துணைக் கண்ட வரலாற்றிலேயே மிகமிக நெருக்கடியான காலமாக இருக்கப் போகிறது! அந்தப் பத்து வருடத்தில் எந்த அளவுக்கு நாம் பணியாற்றுகின்றோமோ—எந்த அளவுக்கு மக்களுடைய மனதைத் திருப்புகின்றோமோ அதைப் பொறுத்துத்தான் நாம் வகுத்துக் கொண்டிருக்கிற விடுதலைப் பிரச்னையின் வெற்றி தோல்வி அடங்கி இருக்கின்றது.

ஏனெனில், இன்னும் ஒரு பத்து ஆண்டுகள்தான் நேருப் பண்டிதருடைய பரிபூரணமான அதிகாரப் பிடி டெல்லியிலே இருக்கும். அதற்குப் பிறகும் அவர் இருப்பார்; 'ஆண்டவன்' அருளால் நீடூழிக் காலம் வாழட்டும்! நியாயமும் நேர்மையும் பேசுகின்ற தலைவர் டெல்லியில் இன்று இருக்கின்ற காரணத்தால்—பாருக்கெல்லாம் சமாதானம் சொல்லி, பஞ்சசீலத்தைப் போதித்து, ஒன்றை ஒன்று தாக்கிக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்துகின்ற ஒரே ஒரு தலைவர் இருக்கின்ற காரணத்தால்தான்—அவருடைய செவியிலே விழுகின்ற அளவுக்கு இந்த பத்து வருடங்களிலே நமது உரிமை முழக்கத்தை வலுப்படுத்தினால்தான் ஏதாவது நியாயம் கிடைக்கும்!

ஆகையினாலேதான் காற்று உள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும்; வெயில் இருக்கிறபோதே உலர்த்த வேண்டும்; தண்ணீர் இருக்கிற போதே துவைக்க வேண்டும்—என்பது போல நேரு இருக்கிறபோதே இந்தக் காரியத்தை முடிக்க வேண்டும்!

ஆகவே இந்தப் பத்து வருடங்களில்தான் நமக்கு மிகமிக அதிக வேலைகள் இருக்கின்றன! ஆகவேதான் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களின் வேண்டுகோளை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஏற்றுக் கொள்ளவில்லையேதவிர, ஏதாவது வம்பு சண்டைக்குப் போகிறதா? யாரும் வரி கொடுக்காதீர்கள்; சட்டத்தை மீறுங்கள்; சர்க்கார் அதிகாரியைக் கண்டால் திராவகத்தை முகத்திலே ஊற்றுங்கள்—என்று காங்கிரசார் நடத்தினார்களே, ஆகஸ்ட் கலவரம்—அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகம் தூண்டவில்லை! அது சொல்வதெல்லாம் உன் நாட்டைப்பற்றி படி; உன் நாட்டைப்பற்றி எழுதுகின்ற எல்லா ஏடுகளிலும் காட்டப்படுகின்ற புள்ளி விவரங்களைப்படி; நாட்டு வரலாற்றைப் படி; வளங்களை எல்லாம் பார்; இப்போதிருக்கிற தரித்திரத்தையும் பார்! அதற்குக் காரணம் வட நாட்டு ஏகாதிபத்தியம் என்பதை உணர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வருவாய்! வருவாய்!—என்பது தான்!

அந்த விடுதலை அணி வகுப்பில் நீங்கள் ஈடுபட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தை வலுவுள்ள எஃகுக் கோட்டையாக மாற்ற வேண்டும் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

●●●

பிறைவானம் . . .

❊ 11-ம் பக்கத் தொடர்ச்சி

"வேண்டாம்; வேண்டாம்! அதோ அவனே நம் பக்கமாக வருகிறான்... நீதான் கேளேன், அவன் எதைக் கிழித்தெறிந்தான் என்று!"

"இதோதான் வந்துவிட்டானே; கேட்கிறேன்!...தம்பீ, இங்கே வாயேன்! தயவு செய்து கோபித்துக்கொள்ளாதே; நீ எதையோ ஆவேசத்துடன் கிழித் தெறிந்தாயே, அது என்ன?"

"உலக சமாதானத்தை!..."

"என்ன? என்ன?..."

"உலக சமாதானமே என் உயிர் லட்சியம்—என்று ஐரோப்பிய நாட்டிலே பெருமை பேசித் திரிகிறாராமே இந்த 'நாட்டின் காவலர்' அந்தச் செய்தி வந்த பேப்பரைப் பார்த்தேன்! பதை பதைத்தது, என் நெஞ்சு! ஆனால் கிழித்தெறிவதைத் தவிர வேறு என்னதான் நான் செய்ய இயலும்?..."

"ரொம்பவும் கவலையோடு இருக்கிறாய் போலிருக்கிறதே, நீ?..."

"கவலையா? களிப்பு கிடைக்கும் என்று காடு பல கடந்து, கல்லிலும் முள்ளிலும் நடந்து, ஓடிவந்த எனக்கு இங்கே மலிவாக-விலையே இல்லாமல் கூடை கூடையாகக் கிடைக்கும் ஒரே பொருள் கவலைதானே! 'இந்தியத் தாயின் தவப் புதல்வர்' அதைத்தானே நமக்குத் தந்திருக்கிறார்! இங்கு நிலை இப்படி இருப்பது தெரிந்தால், தோட்டத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்குச் சங்கம் அமைத்த என் பெற்றோரை, 'பயங்கரவாதிகள்' என்று காட்டிலே சுட்டுத் தள்ளினார்களே மலேயா நாட்டுப் போலீசார், அவர்களது இரக்கமற்றத் துப்பாக்கிக்கு மார்பு காட்டி மடிந்திருப்பேன்!"

"நீ மலேயா நாட்டுச் சிறுவனா?"

"இல்லை; இல்லை; இந்த நாட்டு மன்னரில் ஒருவன்தான். ஆனால் வாழச் சென்ற இடம் மலேயா; வாழ்விழந்த இடம் மலேயா; இங்கு வாழ்வு தேடி ஓடிவந்து வழியின்றி தவிக்கும் ஏழைச் சிறுவன்! என்ன செய்வது? நம்மைக் காக்க வேண்டிய காருண்யமூர்த்தி கடல் கடந்து—காற்றிலே பறந்து உலக சமாதானம் பேசிக்கொண்டிருக்கிறாரே!'

"அதிருக்கட்டும் தம்பிகளே! இப்போது அடுத்தபடி என்ன? பசியின் கொடுமையால்..."

"ஆமாம், தென் ஆப்ரிக்காத் தம்பி! அதற்கு ஒரு வழி எனக்குத் தோன்றுகிறது. ஒரு வழி என்ன; ஒரே ஒரு வழிதான்! பிச்சை எடுப்பது நாம் மூவருமாக! என்ன மலேயா தம்பீ...?"

"சரி...வேறென்ன? வேறு நாடு உதைத்துத் தள்ளுகிறது; பிறந்த நாடு மிதித்துத் துவைக்கிறது! புறப்படுங்கள்!"

[பிச்சை எடுத்துச் செல்லும் மூவரும் ஒரு மாளிகை வாசலில் நிற்கிறார்கள். உள்ளேயிருந்து ஓடிவந்த ஒருவர் மிருகம்போல் பாய்ந்து அவர்களை விரட்டுகிறார். அந்த இரக்கமற்ற முரடன் யார் என்று அவர்கள் கேட்க இப்படி விடை கிடைக்கிறது—"வடக்கேயிருந்து ஓடி வந்த அகதி அவர்—உடனே சென்னையிலே பெரிய உத்யோகம் தரப்பட்டதாம்—இப்போது மாளிகை வாசியாம்!"]

—சொர்ணம்

●●●

உலக சமாதானம்.

“இதுதான் இந்தியாவா? ‘இந்தியாவின் இருதயம்’ என்று யாரோ ஒரு மந்திரி சொன்னாராமே; அந்தத் தமிழ்நாடு இதுதானா? அப்பப்பா! எத்தனை அழகு! சோலைவனங்களும், பச்சைப் பசேல் என்ற வயல்வெளிகளும்......இயற்கையே! உன் செழுமை நேற்றுவரை நான் பட்ட துன்பங்களை எல்லாம் ஓட ஓட விரட்டி விட்டதம்மா...என் தாயகத்தில்—என் அப்பா அடிக்கடி ‘அன்னை நாடு, அன்னை நாடு’ என்று அழுது புலம்புவாரே, அந்தப் புண்ணிய பூமியில்—பொன் விளையும் மண்ணில் காலடி வைத்து விட்டேன்! இனி எனக்கென்ன கவலை? எனக்கென்ன துயரம்? நானே ராஜா! நானே ராஜா!”

“ஓகோகோ!...தம்பி, என்ன சமீபத்துப் பைத்தியம்தானா...?”

“யார் நீ? என்னை ஏன் பைத்தியம் என்கிறாய்? உன்னைப் பார்த்தால்தான் பிச்சைக்காரச் சிறுவன் போல் இருக்கிறது!”

“தம்பி, அதையேதான் நானும் சொல்லுகிறேன். உன் கிழிந்த உடை—குழி விழுந்த கண்கள்—எண்ணெய் காணா பரட்டைத் தலை—இப்படி ஏழ்மையின் முழு உருவாக இருக்கின்ற நீ, ‘நானே ராஜா’ என்று கத்தினால், உனக்கு மூளைக் குழப்பம் என்றுதானே யாரும் சொல்லுவார்கள்! நான் சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது?”

“நான் ஒன்றும் உன்னைப்போல் பரம்பரைப் பிச்சைக்காரனல்ல... என் அப்பா, அம்மா எல்லாம் மிக மிக வசதியோடு இருந்தவர்கள்தான்! இலங்கை—அங்கே எழில் மிக்க வீடும், துன்பம் காணா வாழ்வும் இருக்கத்தான் செய்தது...”

“தம்பி! என்னைப்போலத்தான் நீயுமா?...”

“அப்படியென்றால்?...”

“நீ இலங்கை...நான் தென் ஆப்பிரிக்கா! நாம் இருவருமே வளர்ந்த நாடுவிட்டு—வாழ்ந்த நாடுவிட்டு சொந்த நாடு வந்திருக்கிறவர்கள்தான் என்று சொல்!”

“சங்கத் தமிழ் வளர்த்த நாடு—தங்கம் விளையும் காடு—அந்தத் தமிழகம் நம் சொந்த வீடு—என்று என் அன்னை அடிக்கடி சொல்லுவார்கள்!...”

“ஏன் தம்பி அழுகிறாய்? அழாமல் நடந்ததைத்தான் சொல்லேன்!”

“எதைச் சொல்வது? இந்தச் சிறிய வயதில் தாங்க முடியாத புயலை—பிரளயத்தை எல்லாம் சந்தித்து விட்டேனே நான், அந்தச் சோகச் சரித்திரத்தை எப்படிச் சொல்வது?...தமிழர்களின்—நம்மவர்களின் நெற்றி வியர்வையால்—மிருக உழைப்பால் வளம் பெற்ற இலங்கை மண்ணிலே—அந்தோ, அவர்களே இரத்தம் சிந்தும் கோரக் காட்சியல்லவா நடைபெறுகிறது! அவர்களே பயன்படுத்தி; பயிர் நட்டு; ‘பணம்’ பறிக்கும் பூமியில் அந்த உழைத்தவர்களுக்கே புதை குழி வெட்டப்படும் வேதனையல்லவா வெறியாட்டம் போடுகிறது! நன்றி கெட்டவர்கள்!...நாயினும் கீழான நயவஞ்சக நரிகள்!”

“யாரைத் தம்பி இப்படித் திட்டுகிறாய்? உனக்கு ஏனப்பா இத்தனை ஆத்திரம்?”

“ஆத்திரமா? என்னை அனாதையாக்கிவிட்ட அந்த சிங்கள வெறியர்களை—மொழி வெறி பிடித்த ஆட்சி பீடமேறிகளை கழுத்தை நெறித்துச் கொல்ல என்னிடம் வலுவில்லையே—வயதில்லையே—அதனால் வாய்ப்பில்லையே என்பதால்தான் ஆத்திரத்தால் அலறுகிறேன்; அழுது அழுதுச் சாகிறேன்!”

“உன்னைவிட வேதனை அனுபவித்தவன் நான், தென்னாப்பிரிக்காவிலே! அங்கே நிறவெறிபிடித்த வேங்கைகள்...”

“ஆனால், இந்த மொழி வெறி பிடித்தவர்களைப் போல் கொடுமையானவர்களாக இருக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்!... கேள்; என் அன்னை, என் அப்பா... இவர்களை நான் பிரிந்த கதையைக் கேள்; பிறகு சொல்!...ஒரு நாள் நான் பள்ளி சென்று திரும்பி வருகிறேன். என் வீடிருந்த இடம் சாம்பல்மேடாய் காட்சிதருகிறது. நான் பதறி ஓடுகிறேன். என் அன்னையின் உடல் தீயிலே கருகி, தீயவர்கள் வீட்டுக்குத் தீயிட்ட கொடுமையைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டு கிடக்கிறது! எப்படி இருக்கும் எனக்கு?...”

“ஏன் தீயிட்டார்கள்?”

“இதென்ன கேள்வி! என் இல்லம் தமிழில்லம்; நாங்கள் தமிழர்கள்; அதுமட்டுமல்ல; என் தந்தை தமிழுக்காகப் போராடும் இயக்கத்தில் முக்கியமானவர்; இலங்கை ஆட்சியினர் இழைக்கும் கொடுமையை எதிர்த்துப் போராடச் சென்ற அவரது முடிவையும் சொல்லிவிடுகிறேன் சுருக்கமாக! தந்தையை இழக்கிறோமே என்ற தடுமாற்றம் ஒருபுறமிருந்தாலும், தாய் நாட்டு மானம் காத்திட மடிந்தாரே என்று நான் கணநேரம் மகிழ்ச்சியடைந்தேன், மார்பிலே குண்டு பாய்ந்து அவர் கண்ணிலே வீழ்ந்தபோது...!”

“ஐயையோ...!”

“பார்த்தாயா, நான் அனாதையான கதை எவ்வளவு சுருக்கமாக முடிந்து விட்டது!...ஆனால் எனக்கொரு துணிவு பிறந்தது! ‘ஆசியாவின் ஜோதி’ சுடர்விடும் நாடு என்னுடையது; ‘முடிசூடா மன்னன்’னின் அருள் கொழிக்கும் பூமி என்னுடையது; அங்கே போகலாம்—என்று புறப்பட்டேன். கள்ளத் தோணி கிடைத்தது. வந்து சேர்ந்தேன்...ஆனால்...அந்த ‘மனிதருள் மாணிக்கம்’ ‘சமாதானப் புறா’—‘உலக சமாதானமே என் உயிர் லட்சியம்’ என்று முழக்கி உலகம் சுற்றுகிறது......அதன் கண்களுக்கு நான் புலப்படவில்லை; பக்கத்திலே இருக்கும் இலங்கையில் என்னைப் போல் வதியும் லட்சக் கணக்கானவர்களும் தெரியவில்லையே!...”

“ஆமாம், தம்பி! அந்தச் ‘சமாதானப் புறா’ நாளுக்கு நாள் உயரே உயரே பறந்து கொண்டு போகிறது! அதன் கண்களுக்கு தென் ஆப்ரிக்காவிலே நிறத் திமிருக்கு இலக்காகித் தவிக்கும் என் போன்றவர்கள் மட்டும் எப்படித்தான் தெரிவார்கள்? எந்தக் கொடுமை கூடாது என்று காந்தியார் போராடினாரோ—உதை பட்டாரோ — வீதியிலே வீசி எறியப்பட்டாரோ—அந்தக் கொடுமை அங்கே தலைவிரித்தாடுகிறது! ஆனால் அவரது ‘அருமந்த’ சீடரோ சமாதானம் பேசித் திரிகிறார்!...எந்தக் குற்றமும் செய்யவில்லை தம்பி. என் ஏழைப் பெற்றோர்! வெள்ளையர்களின் உணவு விடுதியிலே நுழைந்து விட்டார்கள். பயங்கரக் குற்றமாம் அது! இன்று சிறையிலே சித்திரவதைகளுக்கிடையே வாடுகிறார்கள்! ‘ஏன் இந்த அநீதி?’ என்று எனக்காக வாதாட குரல் கிடைக்கும் என்று இங்கு ஓடி வந்தேன்; ஆனால் அந்தக் குரலோ ‘உலக சமாதானமே என் உயிர் லட்சியம்’ என்றே புலம்பிக்கொண்டிருக்கிறது!...என்ன; நான் பேசிக்கொண்டேயிருக்கிறேன்...நீ எங்கேயோ பார்த்துக்கொண்டிருக்கிறாய்?...”

“அதோ பார்; அந்த மரத்தடியிலே! உன்னையும் என்னையும் போன்ற ஒரு சிறுவன் கோபத்தோடு எதையோ கிழித் தெறிகிறானே!...”

“சரி, இலங்கைத் தம்பி! வா; பக்கத்தில்தான் போய் பார்ப்போமே!”

✻ 10-ம் பக்கம் பார்க்க

காரணம்...

பள்ளிக்கும் வீட்டிற்குமிடையே இருக்கும் தூரம் என்னவோ இரண்டு பர்லாங்குதான். எவ்வளவு மெதுவாக நடந்தாலும் பத்து நிமிடங்களில் வந்துவிடலாம். ஆனால்...தன் மகனுக்கு மட்டும் ஏன் அரைமணி நேரம் பிடிக்கிறது—இப்படி யோசித்தார் அப்பா!

மறுநாள்...அன்று முக்கால் மணிநேரம் ஆயிற்று!

மூன்றாவது நாள்...ஒரு மணி நேரம் ஆயிற்று!

அதற்கும் அடுத்த நாள்...ஒரு மணி நேரத்திற்குக் குறையவே இல்லை!

அப்பாவுக்கு ஒரே குழப்பம்!

* * *

மறுநாள்...மகன் பள்ளி விட்டு வீடு நோக்கி நடக்க ஆரம்பித்த பிறகு, அவனுக்குப் பின்னாலேயே அவனது அப்பாவும் மறைந்து நடந்து வந்ததை அவன் கவனிக்கவில்லை!

நடந்து வந்து கொண்டிருந்த பையன் ஓரிடத்தில் தரையில் உட்கார்ந்தான். எதையோ மிகமிக ஆவலுடன் உன்னிப்பாக கவனித்தான். இடையிடையே தனக்குத்தானே சிரித்துக் கொண்டான். சற்று நேரம் கழித்து எழுந்து நடந்தான். பின்னால் வந்த அப்பாவும் அந்த இடத்தைப் பார்த்துவிட்டு நடந்தார்.

பையன் பாதையில் இருந்த ஒரு ஓட்டைக் குடிசைக்குள் நுழைந்தான். அங்கிருந்து சற்று நேரத்திற்குப் பின் வெளியே வந்து நடந்தான். தொடர்ந்து வந்த அப்பாவும் குடிசைக்குள் போய் திரும்பினார்,

அடுத்தபடியாக பையன் அடர்த்தியான புதர் ஒன்றுக்குள் நுழைந்தான். சில நிமிடங்களில் உள்ளேயிருந்து அவனது சிரிப்பொலி எழுந்தது. பிறகு தானே சிரித்துக் கொண்டே வெளியே வந்து வீடு நோக்கி நடந்தான்.

அப்பாவும் புதருக்குள் நுழைந்து பார்த்துத் திரும்பினார்.

ஒருவர் பின் ஒருவராக இருவரும் வீட்டிற்குள் நுழைந்தார்கள். அப்பா கைக்கடிகாரத்தைப் பார்த்தார். பள்ளியைவிட்டுப் புறப்பட்டு சரியாக ஒரு மணி, பத்து நிமிடங்கள் ஆகியிருந்தது. அவர் சிரித்துக் கொண்டார். ஏனெனில் தன் மகனின் தாமதத்திற்கான காரணத்தை அவர் புரிந்து கொண்டு விட்டார்.

உங்களுக்குப் புரிகிறதா காரணம்? இல்லாவிடில் அப்பாவும் மகனும் பார்த்த அந்த மூன்று இடங்களையும் சொல்லி விடுகிறேன்; அப்போது புரிகிறதா என்று பாருங்கள்:

முதலில் தரையில் பார்த்தது ஒரு எறும்புப் புற்று.

இரண்டாவது குடிசைக்குள்—வயல் வெளிக்குச் சென்ற உழவர் குடும்பம் தனியே விட்டுச்சென்ற மழலைக் குழந்தை!

கடைசியில் புதருக்குள் இருந்தது ஒரு முயல் குடும்பம்.

எழுத்தாணி

வி. முனிரத்தினம்—வேலூர்.

(?) கேள்விநேரத்தில் சட்டசபையில் மந்திரிகள் கூறும் பதில்கள் என்ன?

"பார்க்கலாம்!"

"பரிசிலனையில் இருக்கிறது!

"தெரியாது!"

"மத்திய சர்க்காரைக் கலக்க வேண்டும்!"

"இதற்குத் தனிக் கேள்வி போடுங்கள்!" — இவைகள் தான் அவர்கள் விடையில் அதிக இடம் பெறுகின்றன.

எஸ். கந்தய்யன்– பெத்துநாயக்கன் பேட்டை—சென்னை.

(?) அன்பழகன் அவர்கள் அம்மை நோய்க்கு மாரியம்மனைக் காரணம் காட்டும் மடமை பற்றிக் கேள்விகேட்ட போது மந்திரி மாணிக்கவேலர், அரசியலில்கூட மடமை உண்டு என்று பதில் கூறினரே; அது பற்றி உமது கருத்து யாது?

அன்பழகன், மாரியம்மனைப் பற்றிக் கேள்வி கேட்டார். மந்திரியார் தன்னைப் பற்றிப் பதில் சொல்லிக்கொண்டார். அவ்வளவுதான்!

கே. சீனிவாசன்—காரைக்குடி.

(?) "புளூ" என்னும் விஷக் காய்ச்சலுக்குத் தாங்கள் 'புளூ' என்பதற்கு நீலம் என்று வியாக்யானம் செய்ய ஆரம்பித்துப் பதில் எழுதினீர்களே; 'F'-க்கும் 'B'யுக்கும் உமக்கு வேறுபாடு தெரியாதா?

ஏன் தெரியாது? நான் நீலம் என்று பொருள் கூறியது எழுத்தை வைத்தல்ல—வார்த்தையை ஒட்டித்தான்! பத்திரிகைகளில் புளூக்காய்ச்சல் என்ற செய்திகள் வந்ததே, அதைக் கேலி செய்வதற்காக எழுதப்பட்ட பதில் அது! மிஸ்டர் 'F'-ஐப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியுமே—விரைவில் நீரும் கேள்விப்படுவீர்!

என். தணிகாசலம்—சேலம்.

(?) சட்ட மன்றத்தில் கழகத் தோழர்களைப் பற்றிய செய்திகளை தினசரி ஏடுகள் இருட்டடிப்புசெய்வது உண்மைதானா?

சந்தேகமென்ன அதில்! இருட்டடிப்பு செய்தால் கூடப் பரவாயில்லையே! இழிவு தரும் வேலையில்கூட இறங்கி விடுகின்றவே! உதாரணம் பாருங்கள்—ஆறுகள் அதிகமில்லை அதனால் அணைகள் அதிகமில்லையென்று அரசினர்கூறுவதைப்பற்றி சட்டசபையில் கருணாநிதி "ஆடத்தெரியாதவள் முற்றம் கோணல் என்ற கதைதான் இது!" என்று கூறியதை 'சுதேசமித்திரன்' மாற்றி இழிவான ஒருவார்த்தையையும் அதோடு இணைத்து வெளியிட்டிருக்கிறது. என்ன செய்வது? பிற்போக்குக் கும்பலிடமும், அடிமைவெறி தலைக்கேறியவர்களிடமும், கொள்கையற்றவர்களிடமும் பத்திரிகைத் தொழில் சிக்கிக் கொண்டு சீரழிகிறது! இருக்கட்டும்; எதிர்காலத்துக்கு அவர்கள் பதில் சொல்லியே தீர வேண்டும்.

பி. வேணுகோபால்— ஜெயங்கொண்டான்

(?) தமிழ்நாட்டு அரசியலில் இந்த வாரத்து முக்கியச் செய்தி என்ன?

பெரியாருக்குப் புதிய எதிரி ஒருவர் கிடைத்திருக்கிறார். அவர் பெயர் பக்தவத்சலம். ஏனெனில் அவர் நாட்டு மக்களுக்கு சினிமா அவசியம் என்று சட்டசபையில் பேசியிருக்கிறார்!

கே. விஜயபாலன்-கோவை.

(?) சட்ட சபையில் பேசும் போது 'காதல்' 'பெண்' என்று உவமை சொல்வதும்; கதையை எடுத்துக் கூறுவதும் பொருந்துமா?

ஏன் பொருந்தாது? உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி ஈன்ஸ்டினிடம் ஒருவர் அவருடைய 'ரிலேட்டிவிட்டி' தத்துவத்தைப்பற்றி விளக்கம் கேட்டபோது, 'நீர் நெருப்பிற்குப் பக்கத்தில் உட்கார்ந்திருக்க நேர்ந்தால் அந்த ஐந்து நிமிட நேரம் ஐந்து மணி நேரமாகத் தோன்றும்; அதே நேரம் நீர் உமது காதலிக்குப் பக்கத்தில் ஐந்து நிமிடம் உட்கார நேர்ந்தால் காலம் போவதே தெரியவில்லை. இவை இரண்டுக்குமிடையேயுள்ள வித்தியாசம்தான் எனது தத்துவம்' என்றார். கணிதத்தின் மூலமும் நீண்ட விவாதத்தின் மூலமும் விளக்கவேண்டிய ஒரு பெரிய விஞ்ஞானத் தத்துவத்தை ஈன்ஸ்டினே காதலையும் பெண்ணையும் உவமைகாட்டி விளக்கியிருக்கிறார் என்றால் அப்படி நாம் உவமை சொல்வதில் மட்டும் தவறென்ன இருக்க முடியும்?

கதைகளைப்பற்றி ஒரு வார்த்தை இம்போது நம்மைப் பழிப்பவர்கள்தான் ஒரு காலத்தில் ஆச்சாரியாரை 'குட்டிக் கதை மன்னர்' என்று போற்றினார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்!

ஜூலை இதழ்
15-ம் தேதியிலிருந்து
விற்பனைக்குக் கிடைக்கும்!

சிந்தையைத் தொடும்
சிறுகதை சொல்வதில்;
செந்தமிழ் மணக்கும்
கட்டுரை தருவதில்;
செந்தேன் நிகர்க்கும்
நறுங்கவிதை பொழிவதில்;
எட்டுதிக்கும் சென்று எழில்
எண்ணம் சேர்ப்பதில்;

தன்னிகரில்லா தனிப்பெரும் ஏடு!

முத்தாரம்

யாழ்- மு. க. வின்
கவிதைநடைச் சிறுகதை!

'முரசொலி'யின்
மாற்றப்பட்டிருக்கும்
புதிய போன் எண்:
84780

பிறப்பு

நமது கலையம் புத்தூர் விற்பனையாளர் தோழர் இரா. தாமோதரன் அவர்களின் துணைவியார் தோழியர் ருக்மணி அவர்கள் சென்ற 1—7—57 அன்று 'அஞ்சுகம்' என்ற பெண் மகவுக்குத் தாயானார்கள்-என்ற செய்தி அறிந்து மகிழ்கிறோம்.

❋ 6-ம் பக்கத் தொடர்ச்சி

கிறோம். எனினும்—ஏற்றத் தாழ்வற்ற சமூக அமைப்புக்கும். சலுகைகள் பெற்று சமத்துவமாக உயர்வதற்கும் பிரிக்கப்படுகிற வகுப்பு முறைகள் தற்காலிகமாகத் தேவைப்படுகிறது என்பதையும்; அந்தத் தேவையும் பின் தங்கியோர் நலத்திற்காக மட்டுமே என்பதையும் நாம் தெளிவாக உணர்வோம். அந்தக் கருத்தின் அடிப்படையில் வகுக்கப்பட்ட பட்டியலில் சிறிய திருத்தம்தான் தரப்பட்டது. ஆனால் நிதிமந்திரியாருக்கு எரிச்சல் கிளம்பியதே தவிர, ஏற்றுக்கொள்ளும் எண்ணம் பிறக்கவில்லை.

பெருந்தன்மையே இவர்களிடம் சிறிதுமில்லையே என்று பெருமூச்சு விட்டவாறு வீட்டுக்கு எதிரேயுள்ள நீண்ட சுவற்றை நோக்கினேன்...தேர்தல் நேரத்தில் ஒட்டப்பட்டுக் கிழிந்து போன சுவரொட்டி கண்ணில் பட்டது: அதில்

"காகிதப் பூ மணக்காது!"

என்ற வாசகம் காட்சியளித்துக்கொண்டிருந்தது. அதையே உற்று நோக்கினேன். அமைச்சரின் உருவம் அதிலே தெரிவது போல் தோன்றியது.

அன்புள்ள,
நண்பன்.

...வரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நா...